# கல்வியும் கலைத்திட்டமும்

சபா· ஜெயராசா

36
4608

# கல்வியும் கலைத்திட்டமும்

பொதுசன நூலகம் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

சபா. ஜெயராசா எம். ஏ. (கல்வி)

4686
122973

அபிராமி பதிப்பகம்
17, ஜும்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம்.

122973

| | | |
|---|---|---|
| TITLE | — | Kalviyum Kalaithiddamum |
| AUTHOR | — | Saba. Jeyarasah, M. A (E D) |
| LANGUAGE | — | Tamil |
| EDITION | — | First, March 1984 |
| COPYRIGHT | — | Author 'Rathy Vasam' Inuvil. |
| PAPER USED | — | White Print - Sri Lanka. |
| SIZE | — | 17·5 c. m X 12.5 c. m Crown |
| TYPE POINTS | — | 10 Pt. |
| COVER DESIGN | — | 'Rema' |
| BINDING | — | Card Board |
| PRINTER & PUBLISHER | -- | Abrami Pathippakam, 17, Jummah Mosque Lane, Jaffna |
| PRICE | -- | Rs. 12-00 |
| SUBJECT | — | Education and Curriculam. |



பேராசிரியர் ப. சந்திரசேகரம்
அவர்கள் வழங்கிய

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# முன்னுரை

ஒரு சமுதாயத்தின் கலைத்திட்ட உள்ளமைப்பிலும், அதனது விரிவாக்கத்திலும், நெகிழ்ச்சித் தன்மையிலும் மனித சக்தியினை வளம்படுத்தும் ஆற்றலிலுமே, மக்கட் சமுதாயத்தின் மேலாண்மை தங்கியுள்ளது எனும் தத்துவம் சமகாலக் கல்வி நெறியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதாகும்.

நாட்டின் பாங்கினை, வளர்ச்சியினை, அந்நாட்டின் வாழ்க்கை முறையினைப் பிரதிபலிப்பதும் கலைத்திட்டம் என்பதும் கல்வி உண்மையாகும்.

கலைத்திட்டம், கல்வி ஏற்பாடு, பாடவிதானம், பாட ஒழுக்கம், என்னும் பெயர்களால் வர்ணிக்கப்படுகின்றது. திட்டமும், ஏற்பாடும் ஒழுக்கமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை.

பல வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி, எழுத்துத் துறையின் மூலம் சமூக ஈடுபாடு கொண்டு, இளம் பல்கலைக்கழக ஆசிரியராக விளங்கும் திரு. சபா. ஜெயராசா அவர்களின் தத்துவ, அனுபவ அறிவே இந்நூலின் கருவாகும்.

ஒரு நாட்டின் பொருளியல் வளர்ச்சி, பல சமூகப் பிணிகளுக்கு அருமருந்தாகும் எனும் இலட்சியத்தைக் கொண்ட ஆசிரியர், மாணவ சக்தி எனும் சீரிய பண்பினை வளர்ப்பதற்கு, அது தத்துவஇயல், உளவியல், சமூகவியல் அறிவியற் பண்புகளில் உருவாக்கப்படுதல் வேண்டும் எனும் கருத்தினை உட்பொருளாகக் கொண்டு, தனது கருத்துக்களைத் தொடர்புபடுத்தி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அளித்துள்ளார்கள்.

கல்வி என்பது பருப்பொருள்; அத்தோடு பருப்பொருளில் எழுந்த முழுப்பொருளாகும். இப்பருப் பொருளை முழுப்பொருளாக்கி, இலக்கியவியலையும் அறிவியலையும் ஒன்றிணைத்து, பசுமைப் புரட்சி காணும் விவசாயி தொடக்கம், அணுசக்திக் கண்டுபிடிப்புக்களைக் காணும் அறிஞர்களுக்கும் தொடர்பு இருத்தல் வேண்டும்;

தத்துவமும் செயலியலும் சங்கமித்தல் வேண்டும்; ஒரு கலைத் திட்டம் ஆற்றுப்படையாக, மாணவர்களின் முழுமையை, ஆளுமையைவளர்த்தல் வேண்டும், எனும் கருத்துக்கள், 'கல்வியும் கலைத் திட்டமும்' எனும் நூலில் வெளிப்படுத்தப்படுகின்றது.

இப்பொருளினையிட்டு எழுத வந்த ஆசிரியர், கலைத்திட்டத்தின் பான்மையினை எடுத்துக் காட்டும் நோக்கத்தோடு, துணைச் சாதனங்களான பாடநூல்கள், நூலகங்கள், வானொலி, தொலைக் காட்சி, ஆகியவற்றையிட்டும் கூறுவது பொருத்தமாகும்.

இலங்கைத் திருநாட்டின் கல்வி - கலைத்திட்டச் சீர்திருத்தங்களைப் பரிணாம நோக்கிற்காட்டி, இந்நாட்டுச் சந்ததியினர் எடுத்த, எடுக்கும் பங்கினையும் எடுத்துக் காட்டுவது இந்நூலின் சிறப்பியல்பாகும். இந்நாடு தந்த கல்வியியலாளர்களின் கருத்துக்களும் தரப்பட்டிருந்தால் கூடிய செழுமை புலனாகும்.

இந்நூல், ஆசிரியரின் கல்வி அறிமுக நூலாக விளங்கி, இது போன்ற பலநூல்களைப் படைக்கும் பொழுதே இவரது முழுமை ஆற்றல் புலப்படும்.

கல்வித்துறை,
யாழ். பல்கலைக்கழகம். — ப. சந்திரசேகரம்
*25-10-1983.*



# நன்றி


- புத்தம்புதிய துறைகளைத் தமிழ் மொழிக்கு இங்கிதம் பெற வழங்கவேண்டுமென்ற உற்சாகத்தை ஊட்டிய அமரர் பேராசிரியர் கைலாசபதி அவர்கட்கும். பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கட்கும்.

- இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கட்கும், எனது கல்வியியல் ஆய்வுகளுக்கு உற்சாகந்தரும் விரிவுரையாளர் வ. ஆறுமுகம், கலாநிதி தி. வேலாயுதம் ஆகியோருக்கும்.

- நூலை அச்சுவடிவாக்க உதவி புரிந்த எழுத்தாள நண்பர் செம்பியன்செல்வனுக்கும் அபிராமி அச்சகத்தினருக்கும்.

கல்வித்துறை,
யாழ். பல்கலைக்கழகம், சபா. ஜெயராசா
திருநெல்வேலி.
*7-11-1983*

# கல்வியும் கலைத்திட்டமும்

மனித வாழ்க்கைத் தொடரின் வளம்மிகு இயக்கச் செயல் முறையாகக் கல்வி விளங்குகின்றது. புராதன குலக்குழுச் சமூகங்களிற் பொருள் ஈட்டவும், பொருள் காக்கவும், சமூகமயப் படுத்தவும் வல்ல திறன்கள் கல்வியினூடாக விருத்தி செய்யப்பட்டமை, கல்விக்கும் பொருளாதாரக் கட்டமைப்புக்குமிடையேயுள்ள தொடர்புகள் மீது ஒளிக்கிறுகளைப் பரவுகின்றன.

பல்வேறு உற்பத்தி முறைகளின் இணைவால் முகிழ்ந்தெழும் சமூக உருவாக்கம், பொருளாதார உற்பத்தி முறை என்ற சக்தி வாய்ந்த அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப் படுகின்றது. இந்த அடித்தளத்தின் விசையும், செயலும் கல்வியைத் தழுவி உற்பத்தி முறைகளின் இயக்கத்தைத் திறன் மிக்குடையதாக்குகின்றன.

பன்முகத்தன்மை கொண்ட சமூக உறவுகளின் ஒட்டு மொத்தமான தொகுப்பின், மூலகாரணமாக அமையும் பொருளுற்பத்தி, கல்வியைத் தழுவிக் கொள்கின்றது. மானுட சமுதாயத்துக்கு அடித்தளமாய் அமையும் உழைப்பு எவற்றின் மீது செயற்படுத்தப்படுகின்றதோ அது இலக்குப் பொருள் எனப்படும். எவற்றின் துணைகொண்டு உழைப்பின் இலக்குப் பொருள் மீது மக்கள் செயற்படுகின்றார்களோ அவையாவும் உழைப்புச் சாதனங்கள் எனப்படும். உழைப்பின் இலக்குப் பொருளும் உழைப்புச் சாதனமும் இணைந்து உற்பத்திச் சாதனம் எனப்படும். பொருளுற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் போது மக்களிடையே எழும் உறவுகள் உற்பத்தி உறவுகளாகும். இவை யாவற்றினதும் கூட்டு மொத்தமே சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு - இந்தக் கூட்டு மொத்த வடிவத்துடன் கல்வி இணைந்தும் நிறைந்தும் செயற்பாடு கொள்கின்றது.

கல்வித் தொகுதி உள்ளிணைந்த பண்புகளைக் கொண்டதாகவும், ஒன்றையொன்று சார்ந்த அம்சங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது. கல்வி, நீண்டகாலமாகவே தேடுதல்களைப் பொருளாகக் கொண்டுவந்துள்ளது இயற்கை, சமூகம், உற்பத்தித்திறன் ஆகியவற்றின் இயக்கங்களிலே தேடுதல்கள் நிகழ்ந்தவண்ணமுள்ளன. கல்வி நிகழ்த்தும் இந்தத் தேடுதல் முடிவற்ற புதுப்பித்தலை ஏற்படுத்தியவண்ணமுள்ளது.

சமூகம் இயங்கியல் வடிவமுடையது. சமூகத்தின் சாதனமாகிய கல்வியும் இயங்கியல் வடிவமுடையது. இயக்கமே உலகின் நித்தியம். இயங்கியற் பொருட்களின் உட் சாரத்துக்கு உள்ளேயே முரண்பாடு உண்டு - எதிர் மறைகளின் ஒற்றுமை, சூழ்நிலைக்கேற்றது - சார்புநிலைக்குரியது. எதிர்மறைகள் எவ்வாறு ஒத்துவாழ முடியும் என்பதை இயங்கியல் விளக்கும் நிலையில், கல்வியிற் பழமைக்கும் புதுமைக்குமுள்ள இணக்கம் புலப்படும்.

கலைத்திட்டம், கல்வியின் செயல் வடிவமாக இயங்குகின்றது. கல்வித் தத்துவங்களும், கல்வி உளவியலும், புதிய புதிய கண்டுபிடிப்புகளும் கலைத்திட்ட வடிவமைப்புக்கும், செயற்பாட்டுக்கும் ஊட்டமளித்தவண்ணமுள்ளன. ஆரம்பகாலத்திற் கலைத்திட்டம் என்பது, வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் பாட உள்ளடக்கத்தை மாத்திரமே கருத்திற் கொண்ட நிலையிலிருந்து படிமலர்ச்சி கொண்டு, இன்று மாணவர்க்கு வழங்கப்படும் முழு அனுபவத்திரட்டையும் குறித்து நிற்கின்றது.

வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் மாணவர்க்கு எத்தகைய பாடங்களைப் படிநிலையாக வழங்கப்படுவது, எத்தகைய அனுபவங்களைத் தொடர்புபடுத்துவது, எவ்வாறு மாணவர்களது அடைவுகளை மதிப்பீடு செய்வது, எவ்வாறு பின்னூட்டம் செய்வது என்ற முழுமையான செயற்பாடுகளைக் கலைத்திட்டம் உள்ளடக்கி நிற்கின்றது. இந்நிலையிற் கலைத்திட்டம் பூரணமான ஒழுங்கமைப்பைக் கொண்ட இயங்கியல் வடிவமென்பது புலனாகின்றது. கல்வி வளர்ச்சியின் புதிய புதிய கோலங்களைக் கலைத்திட்டம் தொடர்ந்து உள்வாங்கிய வண்ணமிருப்பதால், நாளாந்தம் கலைத்திட்ட வடிவமைப்பு தன்னைத்தானே புதுப்பித்த வண்ணமுள்ளது.

கலைத்திட்டத்தின் நீள்முக வளர்ச்சி அனுபவப்படிநிலைகளில் எளிதிலிருந்து சிக்கலுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லுகின்றது. கலைத்திட்டத்தின் பக்கவளர்ச்சி, பாட அனுபவங்களிடையே



உள்ள ஒன்றிணைப்பை வீரியப்படுத்துகின்றது. கலை, விஞ்ஞானம் ஆகியவற்றுக்கிடையேயுள்ள உள்ளார்ந்த உறவுகள் பக்கவளர்ச்சியைப் பலம் மிக்கதாக்கும்.

கலைத்திட்டத்தின் ஓடுபாதை பல இலக்குகளைக் கொண்டு இயங்கிச் செல்லும் பொழுது, ஒரு இலக்கு, பிரதான இலக்காக - மேலாண்மை மிக்கதாக - அமையும். இந்தப் பிரதான இலக்கு, சமூகத்தின் அடித்தளமாகிய பொருளாதாரக் கட்டமைப்பின் இலக்கைத் தழுவி நிற்கும்.

கலைத்திட்டம், மாணவரை மத்தியாகக் கொள்ளல், சமூகத்தை மத்தியாகக் கொள்ளல், பாடங்களை மத்தியாகக் கொள்ளல், தொழிலை மத்தியாகக் கொள்ளல் என்ற நோக்குகள் கலைத்திட்ட இலக்குகளை எடுத்துக் கூறினாலும் சமூகத்தின் அடிநாதமான இலக்கு மேலாண்மை கொண்ட இலக்காக முனைத்தெழும்.

# கலைத்திட்ட அபிவிருத்தி

கலைத்திட்ட அபிவிருத்தி என்பது கற்றல் இலக்குகள், தெரிவு செய்யப்படும் பாட உள்ளடக்கம், கற்றற்கவினிலை, வினைத்திறன் மிக்க ஆசிரியத்துவம், மாணவர்தம் ஆளுமையைப் பூரணமாக வளர்க்கக்கூடிய இங்கிதமான சூழல், சமூகம் தழுவிய பாடசாலைச் செயற்பாடு ஆகிய அனைத்துத் துறைகளிலும், ஒன்றிணைந்த அளவு வளர்ச்சியையும், பண்பு வளர்ச்சியையும் உள்ளடக்கி நிற்கின்றது.

இன்றைய நிலையிற் பாடசாலைகள் தமக்குரிய பணியை மேலும் மேலும் விசாலித்துச் செல்லவேண்டிய தவிர்க்கமுடியாத கடமைகள் சுமத்தப்பட்டு வருகின்றன. பிள்ளைகளை வளர்த்து வழிகாட்டவேண்டிய பெற்றோரின் கடமையும், நல்லறம் புகட்ட வேண்டிய சமய நிறுவனங்களின் கடமையும், சமூகக்குழுக்களோடு இடைவினை கொள்ளவைக்கும், குழுக்களின் கடமைகளும், இன்று பெருமளவிற் பாடசாலைகள் மீதே கையளிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு கையளிக்கப்பட்ட புதிய கடமைகளைக் கலைத்திட்ட அபிவிருத்தி கவனத்துக்கு எடுக்க வேண்டியுள்ளது.

குடித்தொகை வயதுத் தொகுதியமைப்பில் இளையோர் தொகை அதிகரிப்பதாற், கல்விப் பெருக்கை ஏற்படுத்தவேண்டிப் பாடசாலைக் கட்டடங்களையும், அமைப்புவசதிகளையும் விரிவாக்க வேண்டியுள்ளது. அந்த அமைப்புவசதிகள் எண் அளவாக மாத்திரமன்றி, தர அளவாகவும் மேம்பட்டுச் செல்லுதல், கலைத்திட்ட அபிவிருத்தியோடு இணைந்த செயற்பாடாகும்.

எண்ணும், எழுத்தும், வாசிப்பும் என்ற பாரம்பரிய பாட உள்ளடக்கங்களிலிருந்து, விரிந்து வளர்ந்து, நவீன அறிவியற் கோலங்களையும், அழகியற் செழுமைகளையும், கலைத்திட்ட அபிவிருத்தி தழுவிச் செல்ல வேண்டியுள்ளது. அறிவியற்கல்வி, வாழ்வின் நாளாந்த அறை கூவல்களை அணுகவேண்டியுள்ளது. அறி



வியற் பண்பாட்டில் ஏற்படும் விருத்திக்குரிய நவீன மனிதனை வளர்த்தெடுக்க வேண்டிய செயல் முறையைக் கலைத்திட்டம் தனக்குரிய கடப்பாடாக ஏற்கவேண்டியுள்ளது. சமூக மேம்பாட்டுக்குரிய ஆக்கத்திறன்களை விருத்தி செய்வதற்குகந்த வழிகளில் அழகுக்கலைகளைக் கற்பதற்குரிய செயல் முறைகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டியுள்ளன. இந்த அபிவிருத்திகள் அனைத்தும் கலைத்திட்ட அபிவிருத்தியின் உள்ளிணைந்த உறுப்பாக வேண்டியுள்ளன.

கலைத்திட்ட அபிவிருத்தி என்பது பொருளாதார அபிவிருத்தியுடன் ஒன்றிணைந்தது அபிவிருத்தியடையும் நாடுகள் நீண்ட காலக் குடியேற்றநாட்டு ஆளுகைக்கு உள்ளாகிய பொருளாதார ஏற்புடைமைகளையும், அந்த ஏற்புடைமைகளோடு ஒன்றித்த கல்வி ஏற்பாடுகளையும் கொண்டுள்ளன.

அபிவிருத்தியடையும் நாடுகளின் பிரதான பொருளாதாரப் பாங்கு ஓரிரு முதல் விளைவுப் பொருளின் ஏற்றுமதியில் நாட்டின் முழுப் பொருளாதாரமும் தங்கியிருத்தலும், குடித்தொகையிற் பெரும் பகுதியினர் கிராமிய சிற்றுடமை விவசாயத்திலே தங்கியிருத்தலுமாகும். குடியேற்ற நாட்டுக் கலைத்திட்ட வாக்கங்கள், கிராமிய விவசாயத்தின் விளைதிறனைப் பல்லாற்றாலும் ஊக்குவிப்பதற்குரிய செயலூக்கங்களைக் கொண்டிருக்காமை பலகாலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

வளர்முக நாடுகளின் கைத்தொழிலாக்கமும், மூலவளங்களின் உச்சப் பயன்பாட்டையோ, பரும்படியாக்கத்தையோ, உலகக் கைத்தொழிற் சந்தையுடன் வேகமாகப் போட்டியிடக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்காத நிலையிற் கலைத்திட்ட ஆக்கம் கைத்தொழில் வலுவை விசைகொள்ளச் செய்யக்கூடிய அறிவியற் கல்வி, செயல் அனுபவங்கள், கேத்திரகணித பொறிமுறை வரைதல், போன்றனவற்றை உள்ளடக்கிய விருத்தியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

வளர்முக நாடுகளின் வாழ்க்கை எதிர்பார்க்கை ஒப்பீட்டளவிற் குறைவாக இருத்தலும், நோய்த்தடுப்பு ஆற்றலும் - பிணிகளின் பரவலும் ஒப்பீட்டளவிற் கூடுதலாக இருத்தலும், உணவு ஊட்டம் பற்றிய அறியாமை நிலவுதலும், கலைத்திட்ட அபிவிருத்தியில் நலவியற்கல்வியை உண்மை நிலைப்படுத்தலை வலியுறுத்துகின்றன.

அபிவிருத்தியடையும் நாடுகளிற் குடியேற்றநாட்டு மொழித் தாக்கம் நிகழ்ந்தமையால் தாய்மொழிக் கல்வி நலிவுற்ற நிலையிலிருந்து பூரண மீட்சி கொள்ளவேண்டியுள்ளது. தாய்மொழிக்

கல்வியை உயர்கல்வி நோக்கிக் கட்டியெழுப்பவும், வாழ்க்கையையும், தொழில் வினைத்திறனையும் முன்னேற்றமடையச் செய்ய வல்ல சாதனம் தாய் மொழிப் போதனை என்பதை உணரச் செய்யவல்ல ஆளுமையை வளர்க்கவும் வல்ல மொழிக்கல்வியைக் கலைத்திட்டத்திலே பொதிய வேண்டியுள்ளது. இந்நிலையில் அனைத்துலக அறிவியல் முன்னேற்றத்தை இணைக்கவல்ல சர்வதேச மொழியொன்றினை, விரைந்தும், இலகுபடுத்தியும், ஆழமாக்கியும் கற்கவல்ல திறன்கள் கலைத்திட்ட அபிவிருத்தியிலே கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளன.

கலைத்திட்ட அபிவிருத்தி பன்முகப்படுத்தப்பட்டதாய், ஆசிரியரின் பங்குபற்றலை முழுமைப்படுத்துவதாய் அமைக்கப்படும் பொழுது, ஆசிரியர் கல்வி என்பது முடிவுறாத செயல்முறையாக அமைக்கப்பட வேண்டியமைக்கு அழுத்தங் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

அபிவிருத்திக்கு உதவக்கூடிய சுகாதாரத்துறை, போக்குவரத்துத்துறை, கட்டிட நிருமாணத்துறை, தொடர்புச் சாதனங்கள், போன்ற முழுமையான ஒன்றிணைப்பைக் கலைத்திட்ட அபிவிருத்தி கருத்திலே கொள்ளவேண்டியுள்ளது.

மாணவர்களை நடுநாயகமாகக் கொண்டு கலைத்திட்ட அபிவிருத்தி செயற்படும் பொழுது, மாணவர்தம் ஆளுமையைப் பூரணமாக விருத்திசெய்தல், ஆற்றல்களை பூரண நிறைவோடு வளர்த்தெடுத்தல், அடைவுகளைத் திருத்தமாக மதிப்பீடு செய்தல், அடைவின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பின்னூட்டம் செய்தல், ஆக்கபூர்வமான விமர்சனங்களைச் செய்தல், போன்றவை கலைத்திட்ட அபிவிருத்தியிலே கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளன.

கலைத்திட்ட அபிவிருத்தியென்பது முடிவுறாத தொடர்ந்த செயல்முறை. அதனால் அபிவிருத்தியைத் தொடர்ந்து நெறிப்படுத்துவதற்கு நிறுவன வடிவமைப்பு அவசியமென்றும் கருதப்படுகின்றது. இவ்வகையில் இலங்கையில் நிறுவப்பட்டுள்ள பாடவிதான அபிவிருத்தி நிலையம் முன்னேற்பாடான நடவடிக்கையென்றும் கூறலாம்.



யாழ்ப்பாணம்

122973

# கலைத்திட்ட ஒழுங்கமைப்பு

இலக்குகள், வைப்புமுறை, தொடர்ச்சி, ஒன்றிணைப்பு ஆகியவை கலைத்திட்ட ஒழுங்கமைப்பின் ஆதார சுருதிகளாகின்றன. கலைத்திட்ட ஒழுங்கமைப்பு, பாடக்கலைத்திட்டம், பரந்ததுறைக் கலைத்திட்டம், சமூக வாழ்க்கைச் செயற்பாடு தழுவிய கலைத்திட்டம் உள்ளீட்டுக்கலைத்திட்டம் போன்ற கோலவடிவங்களைக் கொள்ளும் பொழுது, அவை ஒவ்வொன்றுக்குமுரிய தனித்துவமான இலக்குகள், வைப்புமுறை, தொடர்ச்சி, ஒன்றிணைப்பு, ஆகியவற்றைச் சூடிக்கொள்கின்றன.

கணிதம், மொழி, விஞ்ஞானம், என்ற பாடங்கள் வழியாகக் கல்விபுகட்டலைப் பாடக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பு கருத்திலே கொள்ளுகின்றது. உளத்துறைகளுக்குரிய பயிற்சி, கணிதம், தருக்கம், போன்ற பாடங்கள் வாயிலாக மேம்படுத்தப்படலாம் என்ற கருத்து, பாடக்கலைத்திட்ட ஒழுங்கமைப்புக்குரிய ஆரம்பகால உளவியல் அரணாயிற்று. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற முதுமொழி, பாடக்கலைத்திட்டப் பண்பை எடுத்துக் காட்டுகின்றது. படிநிலைகளிலே பாட உள்ளடக்கத்தை ஒழுங்கு செய்தலும், எளிதிலிருந்து சிக்கலுக்குச் செல்லுதலும், குறித்த சில பாடங்களுக்கு ஒப்பீட்டளவில் முதன்மை வழங்குதலும், கட்டாய பாடங்கள், விருப்புரிமைப் பாடங்கள், என்ற பாகுபாடுகள், ஏற்படுத்தப்படுவதும், பாடக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பின் குணவியல்பாகின்றன. அறிவுவளர்ச்சிக்கேற்றவாறு, பாடங்களிற் புதுமைகள் புகுத்தப்படுதலும், பாடத்திட்டங்கள் மாற்றியும், புதுக்கியும் அமைக்கப்படுதலும், பாடக்கலைத்திட்டத்தின் பண்பாகின்றன.

122973

இன்றைய பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மற்றும் கல்வி நிலையங்கள் யாவும் பாடக்கலைத் திட்ட ஒழுங்கமைப்பை அடியொற்றியே கட்டியெழுப்பப்பட்டுள்ளன. பாடக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பு நீண்டகாலச் செயற்பாட்டுச் செழுமையைக்

கொண்டமையாற் இயக்குதற்கும், மதிப்பீட்டுக்கும் இலகுவான தென்ற உள்ளுணர்வும் காணப்படுகின்றது.

பாடக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பு பாடநூல்களிலும், குறிப்புக்களிலும் மாணவர்களைப் பெருமளவிலே தங்கவைத்துள்ள தென்றும், பாடப் புலங்களைப் பாகுபடுத்தி, அறிவு நிலையத்தின் முழுமையைக் கூறுபோட முயல்கின்றதென்றும், தனியார் கல்விநிலையங்களின் மிகைச் செயற்பாடுகளுக்கு இடமளிக்கிறதென்றும் விமர்சனம் செய்யப்பட முடியும். மனிதவாழ்வின் சிறப்புக்கு கலையும் விஞ்ஞானமும் ஒன்றிணைந்து செயல் கொள்ளவேண்டுமென்ற உண்மையை நிராகரிக்கும் பொருண்மையற்ற போக்கும் எதிர்மறைத் தாக்கமாகும்.

பாடங்களை ஒன்றிணைத்துக் கற்பித்தல், செயலனுபவங்களைச் செழுமை கொள்ளச் செய்தல், கூட்டுமுயற்சி என்பவற்றுாற் பாடசாலைத் திட்ட ஒழுங்கமைப்பை வளங்கொள்ளச் செய்யலாம்.

பரந்ததுறைக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பு, இயல்புகளின் அடிப்படையிலே பாடங்களை ஒன்றிணைக்க வல்லது. வரலாறு, புவியியல், குடியியல், பொருளியல் என்ற தனித்தனிப் பாட ஏற்பாடுகளை விடுத்து, சமூகக்கல்வி என்ற தொகுப்பில் பரந்த துறைத் தொடர்புகளை ஏற்படுத்த முடியும். அவ்வாறே ஆரம்ப நிலைக் கலைத்திட்டத்தில் வாசிப்பு, எழுத்து, உச்சரிப்பு, விளக்கம் என்ற பாகுபாடுகளைப் பகுக்காது, மொழிக்கலை என்ற பரந்த துறையினுள் அவற்றை அடக்கிவிட முடியும்

பரந்ததுறைக் கலைத்திட்ட ஒழுங்கமைப்பின் செல்வாக்கு இன்று எமது நாட்டுக் கலைத்திட்ட ஏற்பாடுகளிலே செல்வாக்குச் செலுத்தி வருவதை உணரமுடியும். எடுத்துக்காட்டாக முதலாம் வகுப்புமொழிப் பாடநூலிற் தனித்தனிப் பாடங்கள் என்ற பிரிவுகள் வகுக்கப்படாது. அனைத்து நூலும் ஒரே தொடர்ச்சியாகச் செல்லும் பான்மையைக் காணலாம்.

அவ்வாறே இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில், விஞ்ஞானம் என்ற பரந்ததுறை ஒன்றிணைப்பின் கீழ், விலங்கியல் தாவரவியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. பரந்ததுறைக் கலைத்திட்டம், ஒன்றிணைத்தல் பொதுமை காணல், தொடர்பு காணல் ஆகிய திறன்களை முழுமைப்படுத்துகின்றது.

பொதுமையாக்கலிற் கவனஞ் செலுத்தப்படும் பொழுது ஆழக் கல்வி பாதிக்கப்படும் என்ற கருத்தும் நிலவுகின்றது. பரந்த துறை அறிவு எத்துணை முக்கியமானதோ அத்துணை அவசியம் ஆழக்கல்வியிலும் செலுத்தப்படும் பொழுதுதான், கற்றல் இலக்குகளைப் பூரணப்படுத்தமுடியும்.



வாழ்க்கைச் செயற்பாடு தழுவிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பு அன்றாட வாழ்விலே மாணவர்கள் பங்கு கொள்ளவும், செயற்படவும், தயார் செய்யவும் வல்ல திறன்களின் அடிப்படையாகக் கற்றலை வழிப்படுத்திச் செல்ல உதவுகின்றது. வாழ்வுடன் ஒன்றிக் காத ஏட்டுக் கல்வியின் எதிர் மறைத்தாக்கங்களை இந்த ஒழுங்கமைப்பு மாற்றியமைக்க முயல்கின்றது.

வாழ்க்கையுடன் தொடர்புடைய, உணவு, உடை, குடும்பம் என்பவற்றிலிருந்து விரிந்து சென்று கிராமம், நாடு, உலகம் போன்ற அனுபவங்களை நோக்கி இக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பு வியாபித்துச் செல்லுகின்றது.

பொருளாதார ஏற்றத்தாழ்வு நலிவுகளை வழங்கும் சூழ்நிலைகளில் வாய்ப்பு வசதிகள் கொண்ட குடும்பச் சூழலில் வாழும் மாணவர்க்கும், வாய்ப்பு வசதிகள் அற்ற, வறட்சி நிலையில் வாழும் மாணவர்க்கும் உரிய வாழ்நிலை அனுபவங்களிற் காணப்படும் பெரும் விச்சுக்களை, இக்கலைத்திட்ட ஒழுங்கமைப்புக் கருத்திற் கொள்ளாதவிடத்து, வாழ்க்கையின் செயல்முறை தழுவிய செயற்பாடுகள் கற்பிதமாகிவிடும்.

செயல்வழி அனுபவக் கலைத்திட்ட ஒழுங்கமைப்பு, பாரம்பரியமான பாடக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பின் எதிர்மறைக் கோலங்களை மாற்றியமைப்பதற்குரிய உபாயமாகக் கொள்ளப்படுகின்றது. அனுபவ வழியாகக் கற்கும் பொழுது கற்றல் அர்த்தம் பொருந்தியதாகவும், ஆழமாகவும் உள்ளத்திலே பதிகின்றது. அனுபவ வழியாகக் கற்றல், உருவாக்கும் நடத்தை மாற்றங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும், வழி சமைக்கின்றன.

மாணவர்களுக்குக் கற்றற் பிரச்சினைகள் கொடுக்கப்பட்டு, அவற்றிற்குரிய தீர்வு காண்பதற்குரிய தூண்டல் அளிக்கப்படும் பொழுது அனுபவ வாயிலான கற்றல் நிகழ்கின்றது. செயல்வழி அனுபவக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பு மாணவரின், ஈடுபாட்டை முழுமையாக ஈர்க்க முனைகின்றது. ஆனால் அனுபவங்களைப் படிநிலையாக ஒழுங்கமைப்பதும், அவற்றின் வாயிலாகக் கற்றலை பின்னூட்டுவதும். நடைமுறைப் பிரச்சினைகளை உள்ளடக்கியது என்பதும் மனங்கொள்ளப்பட வேண்டும். அனைத்து அறிவுத்துறைகளையும் செயல் தழுவிய அனுபவவழிக் கற்பிப்பதும் சிரமமாகி விடுகின்றது. உயர் வகுப்புகளிலே கருத்துருவ வடிவிலே கற்க வேண்டிய உள்ளடக்கங்களைச் செயல்வழியமைத்துக் கற்பிப்பது மேலும் சிரமமாகி விடுகின்றது.

கலைத்திட்ட ஒழுங்கமைப்பில், உள்ளீட்டுக் கலைத்திட்டம் பற்றிய சிந்தனையும் சிறப்பிடம் பெறுகின்றது. நாட்டின் தேவையையும், மாணவரின் உளப்பாங்கையுங் கொண்டு அவசியமான

உள்ளீடுகளைத் தெரிவு செய்யலாம். உள்ளீட்டு அனுபவங்கள் தருக்க மரபில் ஒழுங்குபடுத்தப்பட்டவையாயும் அமையும். எடுத்துக்காட்டாக, தாய்மொழி மூலம் கல்வி கற்கும் எமது மாணவர்க்கு அனைத்துலக அறிவைத் தழுவிக் கொள்ளும் வகையில், சர்வதேச மொழி ஒன்றினை உள்ளீடாக அமைக்கலாம். மேலும், நலம்மிகு வாழ்வு, பண்பாட்டு நயப்பு, சமதர்மம் போன்றவை அனைத்து மாணவர்க்கும் அவசியம் என்று கருதப்படும்வேளை அந்த அனுபவங்களை உள்ளீடாகப் பொதியலாம். பாட அனுபவங்களை மாத்திரமன்றி, செயல்களையும், செயற்றிட்டங்களையும் உள்ளீடாக ஏற்படுத்திக் கற்றலை முழுமைபெறச் செய்யமுடியும்.

கலைத்திட்டத்தின் நடுநாயகமாக உள்ளீட்டை வரையறை செய்வதும், உள்ளீட்டை நடுநாயகமாகக் கொண்டு கற்றல் அனுபவங்களைச் சுழல விடுவதும், நடைமுறை இடர்பாடுகளை ஏற்படுத்தமுடியும். உள்ளீட்டுக்குரிய அனுபவங்களை தெரிந்தெடுத்தல் தொடர்பான பிரச்சினைகள் பிறிதொரு கோணத்திலே விமர்சனம் செய்யப்படுகின்றன.

மேற்கூறிய கலைத்திட்ட ஒழுங்கமைபுக்களைத் தவிர வகுப்புப் படிநிலைகள் வகுக்காக்கலைத்திட்டம், இருவழிச் செயல்முறைக் கலைத்திட்டம் போன்றவையும் மாணவரது உளவியல் வளர்ச்சி நிலைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. வகுப்பு எல்லைகளுக்குள்ளே மாணவர் தேங்கி நிற்காது, வேகமாக முன்னேறிச் செல்வதற்குரிய ஒழுங்கமைப்பை வகுப்புப் படிநிலைகள் வகுக்காத கலைத்திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கின்றது, ஓடுபாதைக் கலைத்திட்டம் என்பது ஒவ்வொருமாணவரும் தாம் விரைந்து முன்னேறிச்செல்லும் துறைகளுக்கேற்ப ஒவ்வோர் ஓடுபாதையையும் தெரிவுசெய்யக்கூடிய அமைப்பைக் கொண்டுள்ளது. இருவழிச் செயல்முறைக் கலைத்திட்டத்தில், மாணவர் தாம் பொதுவாகக் கற்கும் ஒரு பாதையிலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் சமகாலத்தில், தத்தமது விருப்புக்கும், விசைக்குமேற்பப் பிறிதொரு கற்கை நெறியையும் தெரிவுசெய்து செயற்படுத்த வழியமைக்கின்றது.



# கலைத்திட்டத்தைத் திட்டமிடல்

வாழ்க்கை எதிர்பார்ப்புக்களை நோக்கி, வளங்களை முழுமையாகவும், யதார்த்த பூர்வமாகவும் பயன்படுத்தத் திட்டமிடல் பயன்படுகிறது. அனைத்து மக்களுக்கும் வளங்கள் நீதியாகக் கிடைக்கவும், ஒருமித்த அபிவிருத்தியை மேன்மைப் படுத்தவும் திட்டமிடல் துணைநிற்கும். கலைத்திட்டத்தைத்திட்டமிடல், கல்வித் திட்டமிடல் இணைந்த உறுப்பாகவும், கல்வித்திட்டமிடல், நாட்டின் பொருளாதாரத்திட்டமிடலும் ஒன்றிணைந்த செயற்பாடாகவும் விளங்குதல் பொருத்தமுடையது.

பொருளாதாரத்திட்டமிடலுக்குரிய அனைத்துக் கூறுகளும் கலைத்திட்டத்திட்டமிடலுக்கும் பொருந்தக்கூடியதே. திட்டமிடுதலும் தலையாய நோக்கம், துணைநோக்கங்கள், உடனடி இலக்குகள், நீண்டகால இலக்குகள், என்பவற்றைத் தெளிந்து தேர்ந்து வரையறை செய்யப்படல் வேண்டும். கலைத்திட்டத் திட்டமிடலின் பிரதான இலக்குகளாக மனிதவளவிருத்தி, உற்பத்தித் திறன் விருத்தி ஆகியவை உடனடி இலக்கிலும், நீண்டகால இலக்கிலும் சிறப்பிடம் பெறும்.

திட்டமிடலுக்குரிய பூர்வாங்க ஆய்வு, நிலவளமும், உழைப்பு வலுவும், மூலதனப் பொருள்கள் உள்ளிட்ட மூலதனம் பற்றியதாகவும் அமையும். இவற்றில் உழைப்பு வலுவே அடிப்படையானது என்பது புலப்படும். நிலமிருந்து யாதுபயன் - நிலத்திலே உழைப்பைச் செலுத்தும் பொழுதுதான் உற்பத்தி மலரும். மிகை உழைப்பிலிருந்தே மூலதனப் பொருள்களும், மூலதனமும் ஆக்கப்பெறுகின்றன. இந்நிலையில் உழைப்புவலுவை வினைத்திறன் பொருந்துவதாக்குவதிற் கல்விக்கு நிகர் கல்வியேதான்.

பூர்வாங்க ஆய்வு பூரணப்படுத்தப்பட்ட பின்னர் இலக்குகளை முன்னெடுத்துச் செல்லும்திட்டமிடலும், அதனைத் தொடர்ந்து திட்டச் செயற்பாடும் நிகழும். திட்டச் செயற் பாட்டில் ஒவ்

வொரு கட்டத்திலும், முன்னேற்றம் பற்றிய மதிப்பீடு நிகழும். மதிப்பீடுகளைத் தொடர்ந்து பின்னூட்டம் நிகழ. திட்டவலுவின் ஒவ்வொரு கட்டத்திலும் கல்வி உதவவேண்டியுள்ளது.

கலைத்திட்டத்திட்டமிடலின் இலக்கு தேசம் தழுவிய சமூக பொருளாதார வேட்கைகளுடன் ஒன்றிணைந்தது. கலைத்திட்டத் திட்டமிடலின் பூர்வாங்க ஆய்வு, நாட்டின் எழுத்தறிவு விகிதம், கல்வி அமைப்புவசதிகள், ஆசிரியர்களின் வழங்கல், கல்விக்குரிய முதலீட்டு ஏற்புடைமை, முதலாம், இரண்டாம், மூன்றும் நிலைக் கல்வி ஏற்பாடுகளின் நிலை போன்ற துறைகள் பற்றியதாக அமையும்.

கலைத்திட்டத் திட்டமிடல், இலக்கு, பாட உள்ளடக்கம், கற்பித்தல் ஒழுங்கமைப்பு, மதிப்பீடு, பின்னூட்டம் ஆகிய அனைத்துத்துறைகளைத் தழுவியதாகவும், ஒருங்கிணைந்ததாகவும், ஒன்றன் மீது மற்றொன்று சார்ந்திருக்கும் வண்ணமுடையதாகவும், அமைக்கப் பெறும். பாடஉள்ளடக்கத் தெரிவிலே, இலக்கினோடு இணைந்ததாக, சில துறைகள் மிகையழுத்தம் பெறுதலுண்டு. இன்றைய பொருளாதார வளர்ச்சி தொழில் நுட்பக்கல்வியை அவாவிநிற்பதனாற், கலைத்திட்டப் பாட அனுபவ உள்ளடக்கத்திலே தொழில் நுட்பத்துறை மிகையழுத்தம் பெறுதலுண்டு.

திட்டமிடலின் சிறப்பியல்பு, பொருளாதார வளர்ச்சியிலே விகாரமற்ற சமநிலையை ஏற்படுத்துதலாகும். அதன் பாதிப்பு கலைத்திட்டத்திலும் சம நிலையை ஏற்படுத்துகின்றது. கலை மாணவர்க்கு விஞ்ஞானமும், விஞ்ஞான மாணவர்க்கு கலையும் என்பது இந்தச் சமநிலையை ஒருவகையிலே எடுத்துக் காட்டுகின்றது. ஏட்டுக்கல்வியைச் செயற்பாங்கு கொள்ளச் செய்தலும், செயற்பாங்குக் கல்வியை வளம்படுத்த ஏட்டுக்கல்வியைப் புகட்டுதலும், பிறிதொருவகையான சமநிலையைப் புலப்படுத்துகின்றது.

கலைத்திட்டத்திட்டமிடல் எவற்றைக் கற்பிப்பதோடு நின்று விடாது எவ்வாறு கற்பிக்கப்படல் வேண்டும் என்ற தொகுதியையும் அணுகுகின்றது. இந்நிலையிற் கற்பிக்கும் முறையியல், சாதனங்கள், ஆசிரியர் பயிற்சி என்பவை இத்திட்டமிடலில் அடங்கும்.



# கலைத்திட்ட நோக்கங்கள்

கல்வியின் நோக்கங்கள் கலைத்திட்டத்தின் வழியாகச் செயல் வடிவைக்கொள்வதாற், கலைத்திட்ட நோக்கங்கள், கல்விநோக்கங்களிலிருந்து விடுபட்டுச் செல்ல முடியாது. மனித உயிர் வாழ்க்கையிலிருந்து கல்வியைப் பிரித்துவிட முடியாத நிலையில், வாழ்க்கை நீட்சி முழுவதும் தொடர்ந்து வினைத்திறன் மிக்க கல்வி ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டிய நோக்கம் கலைத்திட்டத்துக்கு ஏற்புடையதாகின்றது.

மனித ஈடேற்றத்துக்கு அடிப்படையாக அமைவது ஆய்வு. ஆய்வு மனோபாவத்தை வளர்த்தலும், ஆய்வுக்குரிய தகவல்களைத் திரட்டல், வகுத்தல், தொகுத்தல், பொதுமை காணல், கருதுகோள்களை உருவாக்குதல், பரீட்சித்தல் என்றவாறு பல்வேறு செயல்முறைகளை ஊட்டுதலும் கலைத்திட்டத்தின் நோக்காக அமைகின்றது.

கலைத்திட்டம் மாணவரின் பூரணமான ஆளுமை விருத்தியையும், படைப்பாற்றல் விருத்தியையும் முழுமைப் படுத்தும் சாதனமாக இயங்கவேண்டிய இலக்கைக்கொள்ளுகின்றது. பாடங்களின் உள்ளடக்கம், அனுபவங்களின் உள்ளடக்கம், பாடசாலையில் நிகழும் செயற்பாடுகள் அனைத்தும், ஆக்கத்திறன் வளர்ச்சியை ஆர்முடுகல் செய்யவேண்டியுள்ளது. கலைத்திட்டச் செயற்பாடுகள் அறிவு, கற்றல் அனுபவங்கள், மனவெழுச்சி, உடற் செயற்பாடுகள், ஆகியவற்றைத் தழுவியதாகவும் செல்தல் வேண்டும். இவற்றைத் தொகுத்து நோக்கும் பொழுது மானுடப் பண்புகள் அனைத்தையும் உயர்த்துதல் கலைத்திட்டநோக்காக இருப்பதை அறியமுடியும்.

தற்கால, அறிவியல், தொழில் நுட்பவியற் பண்பாடுதழுவிய மனிதனை உருவாக்க வேண்டிய இலக்கும் இன்று கலைத்திட்டத்திடம் வழங்கப்பட்டுள்ளது. அறிவியல் நோக்குடன் அழகியல் நோக்கையும் கலைத்திட்டம் சூடிமுழுமை கொள்ளுகின்றது.

சமூகக்கட்டமைப்பு சமய மரபுகளுக்கு அழுத்தங் கொடுத்த வேளை, கலைத்திட்டத்தின் தலையாய நோக்கம் ஆன்ம ஈடேற்றம் என வற்புறுத்தப்பட்டது. ஆன்ம ஈடேற்றமே நிலையான விடுதலையையும், சாந்தியையும், அமைதியையும், வழங்கும் என்ற எதிர்பார்ப்பு கலைத்திட்டத்தின் உன்னத இலக்காக உருவெடுத்தது.

ஆன்மீக நோக்கோடு இணைந்ததாகவும், விடுபட்டதாகவும், வையத்து வாழ்க்கை நோக்கு கலைத்திட்ட நோக்காக வரையப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாக, உலகியலில் ஈட்டப்பட வேண்டிய திறன்களை வளர்த்தெடுக்கும் வழிகளைக் கலைத்திட்டம் உட்பொதிந்து செயல் கொள்ள வேண்டியுள்ளது, வாழ்வு நோக்கு, தொழில்நோக்குடன் ஒன்றிணைந்து கொள்ளுகின்றது. அதனால், முன்தொழில் அனுபவத்தினைப் பெறும் வாய்ப்புக்கள் கலைத்திட்டத்திலே ஏற்படுத்தப்படுகின்றன.

மக்களிடையே புரிந்துணர்வையும், கூட்டுறவையும், வளர்க்கும் சமூக நோக்கே கலைத்திட்ட நோக்காக அமைய வேண்டும் என்ற இலட்சியங்களும் நடைமுறை கொள்ளுகின்றன. சமூகமயமாக்கலைக் கலைத்திட்டம் வழிப்படுத்துகின்றது. குழு நடத்தைகளை நெறிப்படுத்தல், ஆக்க நிலை தழுவும் குழு உருவாக்கம், சமூக ஒழுங்கு எதிர் மறைத்தாக்கத்துக்குள்ளாவதைச் சீர்ப்படுத்தல் போன்ற பண்புகள் சமூக நோக்கத்தின் பாற்படுகின்றன. சமூகமயமாக்கலின் அடிப்படையாக விளங்கும் அம்சங்களில் மொழித்திறன் முக்கியத்துவம் பெறுகின்றது. மொழியை அறிதல், உணர்தல், பயன்படுத்தல், என்றவாறு தொடர்பு கொள்ளலை வளம்படுத்தல் கலைத்திட்டத்தினால் மேற்கொள்ளப் படுகின்றன

கலைத்திட்டம் மாணவரை நடுநாயகமாகக் கொண்டு கட்டியெழுப்பப்படவேண்டும் என்பது, கலைத்திட்டத்தில் மாணவ நோக்கை வலியுறுத்துகின்றது. மாணவனை மத்தியாகக் கொள்ளுதல் என்பது, தனித்து உளவியல் சார்ந்த செயற்பாடு மாத்திரமன்றி, எவ்வகையிலும் சுரண்டலுக்குள்ளாக்கப்படாத மானுட செயற்பாடுகளின் மலர்ச்சி என்று கொள்ளப்படமுடியும்.

அனைவர்க்கும் சமத்துவம், சமநீதி காணும் புதியதோர் உலகைக் கட்டியெழுப்புதலே கலைத்திட்டத்தின் தலையாய இலக்



காகப் பரிணமிக்கச் செய்ய வேண்டும் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன. கல்விக்குரிய முதலீடுகள் மொத்தத் தேசிய பொருளாக்கத்தில் அதிகரிப்பை ஏற்படுத்துதலும் ஈண்டு நினைவு கொள்ளக் கூடியதே.

கலைத்திட்டம் நாட்டுப்பற்றை வளர்த்து, அதன் வழியாக அனைத்துலக நெறியை ஈட்டவேண்டும் என்ற இலக்குகளும் முன்மொழியப்பட்டுள்ளன. நாட்டுப்பண்ணை நயமுடன் இசைத்தல், தேசியக்கொடியைக் காலையில் ஏற்றிக்களிப்படைதல், போன்றவை கலைத்திட்டச் செயற்பாடுகளின் ஆரம்ப நிகழ்ச்சிகளாகவும், பாடசாலைகளிலே பின்பற்றப்படுகின்றன. உலக விவகாரங்களை அறிதல், அகிலத்துக்கு மேன்மை தந்த புரட்சிகளைப் படித்தல், வரலாற்றுப் பிரக்ஞை, போன்ற அனுபவங்கள் கலைத்திட்ட உள்ளடக்கத்திலே அமைக்கப்பெறுதலும், கலைத்திட்டத்தின் வழியாக அனைத்துலக மாணவனை உருவாக்கும் பணியாக விளங்குகின்றது.

அறிவு என்பது அறிவுக்காக என்ற வாதமும் கலைத்திட்ட நோக்கிலே ஆட்சி செலுத்த வேண்டுமென்ற கற்பனாவாதங்களும் முன்வைக்கப்பட்ட நிலையில் தூய அறிவுப்பேறு ஆழ்ந்து வற்புறுத்தப்பட்டது. தொகுத்து நோக்கும் பொழுது கலைத்திட்ட நோக்கங்கள் மக்களின் வாழ்நிலையிலிருந்து உயிர்ப்புக் கொள்வதைக் காணலாம். வாழ்நிலை எத்தகைய இலக்குகளை விதந்து அவாவி நிற்கின்றதோ, அந்த இலக்குகள் கலைத்திட்டத்திலும் பிரதான இலக்குகளாக முனைப்புக் கொள்ளும், முழுமையான இலக்கு, அனைத்துப்பண்புகளையும் தழுவிய இலக்காகவும், ஒன்றுடன் ஒன்று இயைந்தும், இடைவினைகள் பொலிந்தும், ஒன்றையொன்று தாக்கிச் செயற்படும் இலக்காகவும் செயல் கொள்ளும்.

# கலைத்திட்டத்தை வளம்படுத்தும் கல்வித் தரிசனங்கள்

வழிவழிவந்த கல்வித் தரிசன நோக்குகள் கலைத்திட்ட ஆக்கத்துக்கும் படிமலர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்துள்ளன. மக்கள் தம்வாழ் நிலைகளிலிருந்து முகிழ்த்தெழும் சிந்தனைகள், வாழ் நிலையின் எதிர்மறைகளைத் துடைத்தெறிவதற்குரிய வீச்சைச கொள்ளுகின்றன. அல்லது எதிர்மறைகளோடு ஒன்றித்துச், செல்லும் சலனங்களையுங் கொள்ளுகின்றன.

கல்விக்கருவூலங்கள் பலவற்றை உருவாக்கிய கிரேக்க சிந்தனையாளர்களுள் பிளேட்டோவின் சிந்தனைகள் கலைத்திட்ட வாக்கத்துக்கு வளமூட்டுவதிற் சிறப்பிடம் பெறுகின்றன. கிரேக்க கல்விச் சிந்தனைகள் கல்வி ஒழுங்கமைப்பை ஆரம்பநிலைக் கல்வி, இரண்டாம் நிலைக்கல்வி, உயர்கல்வி என்ற மூன்று நிலைகளை வகுத்த நிலையிலிருந்து மேலும் ஒருபடி முன்னேறிச் சென்ற பிளேட்டோ, குழந்தையின் பிறப்புக்குமுற்பட்ட கருவுற்ற நிலையில், சிசுவின் தாய்க்கு அளிக்கப்படவேண்டிய கல்வி பற்றிய கருத்துக்களையும் வழங்கினர். சமூக மாற்றம் கலைத்திட்டத்தினூடாக ஈட்டப்படமுடியும் என்பதும், ஒருவரின் ஆளுமை வளர்ச்சி, ஆன்மவளர்ச்சி போன்றவை இசைக்கல்வியாலும், உடற்பயிற்சியாலும் ஈடேற்றப்படமுடியும் என்பதும், ஆசிரியத்துவத்தின் மகத்துவமும் பிளேட்டோவால் வற்புறுத்தப்பட்டன.

ஐரோப்பிய மறுமலர்ச்சிச் சிந்தனைகளுடன் ஒன்றிணைந்த ரூசோவின் கருத்துக்கள் இயற்கை நெறிதழுவும் பாங்கினைக் கலைத்திட்ட வளர்ச்சிக்கு வழங்கியது. குழந்தைகளின் உடல், உளவளர்ச்சிக்குரியவாறு இயற்கை நெறிதழுவிய கல்வி ரூசோவால் முன்மொழியப்பட்டது. செயல்வழி அனுபவங்கள் வாயிலாகக்கற்றல், புலன்களுக்குப் பயிற்சியளிப்பதன் வாயிலாகக் கற்றல், ஆண்



பெண் கூட்டுக்கல்வி, தனிமனித வளர்ச்சியை முதன்மைப் படுத்தும் கல்வி ஆகியவை ரூசோவின் கருத்துக்களினுல் வளமூட்டப்பெற்றன.

டூயி வழங்கிய கல்விக் கருத்துக்கள், நவீன விஞ்ஞானப் பண்பாடுகளின் மத்தியிலே உருவாக்கப்படவேண்டிய செயலனுபவக்கல்வி தழுவிய மனிதனைப் பற்றியதாக அமைந்தது. பாடசாலைக்கலைத்திட்டத்தில் தாராண்மையான போக்குகள் மலர்வதற்கும். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய செயல்முறையைக் கற்றலையும், செய்திட்ட அனுவத் தொகுதிகள் வளம் பெறுவதற்கும் மக்களாட்சிப் பண்புகளை மலர்விக்கக் கூடிய செயற்பாடுகளையும் டூயி கட்டியெழுப்பினர். குறிப்பாகக் கண்டுபிடிப்புக்குரிய முறையிற் கற்றலும் கற்பித்தலும் நிகழ்வதற்குரிய சூழலை டூயி வேண்டி நின்றதுடன், சமைத்தல், தைத்தல், மரவேலை, தோட்டவேலை, விஞ்ஞானம், சங்கீதம் போன்ற பாடங்கள் அனுபவ வாயிலாகக் கலைத்திட்டத்தில் வளம் பெறுவதற்குரிய ஏற்பாடுகள் வலுப்படுத்தப் பெற்றன.

காந்தியின் கல்விநெறி பாரம்பரிய இந்துப் பண்பாட்டில் முகிழ்த்ததாகவும், அரசியல், பொருளாதார, பண்பாட்டு அடிமை நிலைக்களுக்குள்ளாகிய இந்தியச் சூழலின் குறித்தகாலப் பகுதிக்குரிய கலைத்திட்டச் செயற்பாடுகளைக் கொண்டதாகவும் அமைந்தது உளம்கைகளின் வாயிலாகக் கற்பிக்கப்பட வேண்டுமென்ற கலைத்திட்டக்கருத்து காந்தியடிகளினுல் வழங்கப்பெற்றது. கலைத்திட்டத்திலே தாய் மொழியின் இன்றியமையாப் பண்பை வலியுறுத்திய காந்தியடிகள், செய்யும் தொழில்கள் வாயிலாகக் கற்றல், தன்னிறைவு, கிராமப் புனருத்தாரணம், ஹரிஜனர் வாழ் நிலையை உயர்த்துதல், சேரிகளுக்குப் புனர்வாழ்வு இப்சைகளை ஒழித்தல், போன்ற ஒழுங்குகள் கலைத்திட்டத்திலே வளம் பெறுவதற்குச் செயல்வழுங்கினர். படிப்படியாக ஆசிரியர்களின் சம்பளத்தை ஈட்டக்கூடிய திறனுடையதாகக்கலைத்திட்டம் செயற்பாங்கு கொள்ளவேண்டும் என்பதும் காந்தியடிகளின் எதிர்பார்ப்பாக அமைந்தது.

மாறியா மொன்டிசூரி அம்மையாரின் கலைத்திட்டச்சிந்தனைகள் கலைத்திட்டத்துறையிலே புருத்துச் சிந்தனைகள் ஊட்டம் பெறவும், உடற்செயல், உளச்செயல் ஆகியவற்றைத் தழுவிக்கலைத்திட்டம் வளங்கொள்ளவும் வழிபிறப்பித்தது. குழந்தைகளின் விடுதலைக்கும் சனநாயக மரபுகளுக்குமான ஏற்பாடுகள் பொதியப்பெற்றதுடன், குழந்தையின் உளநலத்தைப் பேணுவதற்குரிய விதிகள் குழந்

ஜதையின் உடல் நலத்தைப் பேணுவதுடன் சமாந்தர இணைப்புக் கொண்டுள்ளமையும் அம்மையாரால் விளக்கப் பெற்றன.

கார்ல் மார்க்ஸ், பிரிட்ரிக் ஏங்கல்ஸ் ஆகியோருடையகருத்துக்கள், பொருள் முதல்வாதம், இயக்கவியல், வரலாற்றுநோக்கு ஆகியவை தொடர்பான தெளிவான கண்ணோட்டங்கள் வலுப்பெறவழிவகுத்தன. உலக நியதிகளுக்கு விந்தைமிகு விளக்கங்களைக் கட்டியெழுப்பும் மெய்யியலிருந்து மார்ஸிய மெய்யியல் அடிப்படையில் வேறுபாடுகொண்டு, உலகை மாற்றியமைக்கும் செயல் முறைகளை விளக்கியமை கலைத்திட்டவடிவமைப்பில் புத்தாக்கங்களை வருவித்தது. அனைத்துச் சுரண்டல்களிலிருந்தும் மாணவர்க்குப் பூரண விடுதலையளித்தல், எல்லாப் பிள்ளைகளுக்கும் பொதுப்பள்ளிக் கூடங்களில் இலவசக்கல்வியை அளித்தல், கல்வியைப் பொருளுற்பத்தியுடன் இணைத்தல், பூரணமாக உடல், உள்ள ஆற்றல்களை வளர்த்தெடுக்கக்கூடிய அறிவியல், முருகியல், தழுவிய கலைத்திட்டம் வளர்ச்சிபெற மார்க்ஸியச் சிந்தனைகள் விசைகள் வழங்கின.

1972 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட கலைத்திட்டமாற்றங்கள் பெருமளவிலே மார்ச்ஸிய சிந்தனைகளால் வளம் பெற்ற சமநிலையாக்கத்தைக் கொண்டுவிளங்கின. அனைவர்க்கும் அறிவியற்கல்வி, முன் தொழிற் பயிற்சி, கேத்திர கணித பொறிமுறை வரைதல், அழகியல், போன்ற அனுபவப் புலங்கள் சமநிலைததும்ப அக்கலைத்திட்டத்திலே பொதியப் பெற்றன.



# உளவியற் செல்வாக்கு நிலைகள்

கற்றலோடு தொடர்புடைய நடத்தைமாற்றங்களை அறிதல், கற்றற் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல், இங்கிதமான சீராக்க முறைகளை உருவாக்குதல், கற்றலிலும், கற்பித்தலிலும் வினைத்திறன்களை வருவித்தல், திருத்தமான மதிப்பீடுகளை ஏற்படுத்துதல், போன்ற இன்னோரன்ன பல செயற்பாடுகளைக் கல்வி உளவியல் கொண்டுள்ளமையால், அதன் செல்வாக்கு நிலைகள் கலைத்திட்டத்தை என்றும் வளம்படுத்திய வண்ணமுள்ளன.

மாணவரின் உளவளர்ச்சி உடலியக்க வளர்ச்சி என்பவற்றைத்தழுவியதாக, வகுப்புக்களின் வளர்ச்சியும், பாடசாலை ஒழுங்கமைப்பும் இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது. பாலர் பாடசாலை, ஆரம்பபாடசாலை, கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை என்ற பாடசாலை ஒழுங்கமைப்புக்கள், பிள்ளைப்பருவம், முன்கட்டிளமைப்பருவம், கட்டிளமைப்பருவம், வாலிபப்பருவம் என்ற உடல் உளவளர்ச்சிக் கோலங்களைத்தழுவிச் செல்வதைத் தொடர்புபடுத்தலாம்.

நுண்மதிபற்றிய ஆரம்ப காலக் கொள்கைகள், ஒருவருடைய நுண்மதி பதினைராம் வயதுத் தொடர்ச்சியில் முதிர்ச்சி பெறுகின்றதென்றும், அதன் காரணமாக அப்பருவத்தில் நிகழ்த்தப் பெறும் நுண்மதிப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு, எதிர்காலக் கல்விப் பேறுகள் நிர்ணயம் செய்யப்பட்டமையும் பிரித்தானியாவின் அனுபவங்களாகும். உளவியல் ஆய்வுகளின் வளர்ச்சி, நுண்மதி பற்றிய ஆரம்பகாலக் கொள்கைகளிலே திருப்பு முனைகளை உருவாக்கி வருகின்றன. எதையும் எப்பருவத்திலும், எந்நிலையிலும், படிநிலைப்படுத்திக் கற்பிக்க முடியும் என்ற ஆய்வுமுடிவுகள், கல்விவழங்கப்பெறும் கவிநிலைபற்றிய சிந்தனைகளுக்கு அழுத்தங்கொடுக்கின்றன.

உளவியலின் வளர்ச்சி மாணவரின் அடிப்படைத்தேவைகள் மீது ஒளிபாய்ச்சியது. அடிப்படைத்தேவைகள் நிறைவேற்றப் படாத விடத்து, கற்றற் செயற்பாடுகள் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதனால் உடலியல்சார் தேவைகளோடு அன்பு, கணிப்பு, மாணவர்தம் திறமைக்குரிய அடைவு, போன்ற உளவியல் சார்ந்த தேவைகளும் நிறைவேற்றப் படுவதிற்கவனஞ் செலுத்துவதில் ஆசிரியர் பொறுப்பேற்க வேண்டியுள்ளது.

அடிப்படைத்தேவைகள் நிறைவேற்றப்படாத விடத்து எழுகின்ற மனமுறிவுகள், வகுப்பறைக் கற்பித்தலைப் பாதிக்க முடியுமாகையினால், ஆசிரியர் தமது கற்பித்தலை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குரிய, சிறந்த சீராக்க முறைகளைக் கையாளுதல் அவசியமாகின்றது. நிறைவேறாத தேவைகளும், ஆசைகளும், நனவடியுள்ளத்திலே அமுங்கிப் புதைந்து, உளவியற் சிக்கல்களை ஏற்படுத்தும் என்ற ஆய்வுகளும் கருத்திற் கொள்ளத்தக்கன.

கற்றலுக்குரிய ஊக்கம், மாணவரின் முதிர்ச்சி, இலக்கு, வெற்றிகள், புகழ்ச்சி, வெகுமதி, போன்றவற்றால் வளர்த்தெடுக்கப்படுவதனால், கலைத்திட்டச் செயற்பாட்டில் நடுநாயகமாக விளங்கும் ஆசிரியரும் மாணவரும் அவற்றைத் தெளிந்து தேர்ந்து பயன்படுத்த வேண்டியுள்ளது. உளவியலின் வளர்ச்சி காரணமாக முகிழ்த்தெழுந்த கற்பித்தல் முறைகள் கலைத்திட்டத்துக்கு வளமூட்டிவருகின்றன. ‘கிண்டர்கார்டன்’ என்ற குழந்தைகள் பூங்கா, மொன்ரிசூரி முறை ஆகியவை, ஆரம்பபாடசாலையில் அனுபவவழி அறிவூட்டலுக்கு அழுத்தங்கொடுக்கின்றன. மரத்துண்டுகள், வண்ணக்கலவைகள், நூல்கள், சக்கரங்கள், வளையங்கள், அட்டைகள், என்பவற்றைக் கொண்டு குழந்தைகள் தமது அனுபவங்களைக்கட்டி யெழுப்புதலும், மனத்துக்குக்களிப்பூட்டும் முயற்சிகள் மூலம் கல்வியனுபவங்களை வளர்த்தலும், அவற்றால் வளமூட்டப்பட்டுள்ளன.

விளையாட்டுமுறை, பிரச்சினை விடுவித்தல் முறை, கண்டறிமுறை, செயற்றிட்ட முறை, நிரலித்த கற்பித்தல் முறை, போன்ற முறையியல்கள் வகுப்பறைக் கற்பித்தலில் வினைத்திறனை ஊட்டி வருகின்றன. கற்பித்தலின் உள்ளடக்கத்திலிருந்து கற்பித்தல் முறையியலைப் பிரித்துவிட முடியாத அமைப்பியற் பண்பு காணப்படுகின்றது.

ஒவ்வொருவரதும் ஆளுமையைப் பூரணமாக வளர்க்கக்கூடியவாறு கற்பித்தல் அமைக்கப்படுதலை உளவியல் வற்புறுத்துகின்றது. சூழலின் பெறுபேறு குழலின் உருவாக்கம், நடத்தைகளின்



தொகுப்பு, மனப்பாங்குகளின் முழுமை, துலங்கலின் வளர்ச்சி, என்பவற்றின் முழு அமைப்பையும் ஆளுமை உள்ளடக்கும் பட்சத்தில், அவற்றை வளர்க்கும் பணியைக் கல்வி மேற் கொள்ள வேண்டியுள்ளது ஆளுமை பூரணவளர்ச்சியைக் கொள்ளவேண்டுமாயின். மாணவரின் அந்நியமயமாதலை ஒழிப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் அவசியமாகின்றது.

உளவியற் கல்வி, வழிகாட்டல் பற்றிய சிந்தனைகளையும் கலைத்திட்டத்திற்கு ஊட்டஞ் செய்கின்றது. சூழலின் அறைகூவல்களை எவ்வாறு ஏற்றல், எதிர்காலக்கல்வியிற் செயல் கொள்ளல், தொழில் நடவடிக்கைகளைப்பற்றிய மனோபாவங்களை உருவாக்குதல், தேசிய வாழ்விற் பங்கு பெறுதல் என்பவற்றை வழிகாட்டல் உள்ளடக்குகின்றது. வழிகாட்டல் எதிர்காலம் பற்றிய உறுதியை வழங்குவதாற், கற்றல் நெகிழ்ச்சி கொண்டதாக விளங்குகின்றது.

உளவியலின் செல்வாக்கு, கூட்டுமொத்தமாக அறிவின் முழுமையையும், தொகுப்பையும் எடுத்துக்கூறுகின்றது. அவற்றின் விளைவாக இன்று பாடங்களுக்கிடையுள்ள ஒன்றிணைப்பு வகுப்பறையிலே மேம்படுத்தப்பட்டு வருகின்றது. அறிவை வாழ்க்கை அனுபவங்களுடன் ஒன்றிணைத்தல், வளர்ச்சியுற்று வருவதும் அவதானிக்கக்கூடியதே.

மாணவரின் அடைவைப் புறவயமாக அளவிடுதவற்குரிய புறவயச் சோதனைகள் விருத்தியுற்று வருகின்றன. பல்தேர்வுச் சோதனைகள், அமைப்புடையகட்டுரைச் சோதனைகள், முதலியவை இன்றைய பொதுத்தேர்வுகளிலே அதிக அளவு பயன்படுத்தப் பெறுதலும் நோக்குதற்குரியது.

# எதிர்மறைத் தாக்கு விசைகள்

கலைத்திட்டத்தின் பழுதிலாச் செயற்பாடுகள், வகுப்பறையைச் சூழ்ந்துள்ள சமூக, பொருளாதார, பண்பாட்டுக் கோலங்களின் எதிர்மறைத் தாக்குதலுக்குள்ளாகி இலக்குகளை ஈட்ட முடியாத இடர்களைப் புனைதல் உண்டு. நாடுமுழுவதும் ஒரே கலைத்திட்டம் செயற்பாடு கொள்ளும் பொழுது, பொருளியற் கோல வேறுபாடுகளினால் பாரிய செயல்வேறுபாடுகள் ஏற்படுதல் உண்டு.

ஒரே கலைத்திட்டம் என்ற சமத்துவ நெறி முற்போக்குடையதாயிருப்பினும், உணவு, உடை, ஏமம், போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத வறகட நிலையில் மாணவர் எவ்வாறு கற்றல் அனுபவங்களைப் பூரணப்படுத்த முடியும் என்ற கேள்வி எழுதல், மாத்திரமன்றி, பாடசாலைக் கவிநிலையிலும் பொருளாதாரக் கோலங்களின் தாக்குதல்கள் முனைப்படைந்துள்ளன. இடநெருக்கடி, போதிய தளபாடமின்மை, ஆய்வு கூட வசதிகள் இன்மை, என்ற பற்றாக்குறைகளை அனுபவிக்கும் பாடசாலைகளும், வாய்ப்பு, வசதிகள் பெருகிக் காணப்படும் பாடசாலைகளும், கற்றல் அனுபவங்களை வழங்குகையிற் பகைப்புல வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

உடல்களைக்காமல், வியர்வை சிந்தாமல், நாற்காலியில் அமரத்தக்க தொழில் முயற்சிகளுக்கும், உடல் உழைப்பை முதன்மைப்படுத்தும் தொழில் முறைகளுக்குமிடையே காணப்படும் சமூக விழுமிய வேறுபாடுகள் கலைத்திட்ட இயக்கப்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றின் தாக்கங்காரணமாக தொழில் நுட்பப்பாடங்கள் மீதான ஆர்வம், மாணவரிடத்து ஒப்பீட்டளவிற் குறைந்ததாகக் காணப்படுகின்றது.



குடியேற்ற நாட்டு ஆட்சிக்காலத்தில் அறிமுகம் செய்யப்பெற்ற பரீட்சை ஒழுங்கமைப்புகள், அடிப்படை மாற்றங்கள் இன்றிப் பின்பற்றப்பட்டுவருவதால், அநர்த்தங்கள் மலிந்துள்ளன. நாடுமுழுவதற்குமான பரீட்சைகள் ஒரே மத்திய நிலையத்திலிருந்து கட்டுப்பட்டிருத்தல், க. பொ. த. சாதாரணத் தேர்வு, க. பொ. த. உயர்தரத்தேர்வு என்ற ஆண்டுக்கொருமுறை நிகழும் ஒரே பரீட்சையினால் மட்டும் மாணவரின் எதிர்காலம் முழுதாகத் தீர்மானிக்கப்படுதல், பாடங்கள் பெருமளவில் எழுத்துப் பரீட்சையில் மாத்திரம் தங்கியிருத்தல், பரீட்சைகள் தற்செயல் வாய்ப்புக்கு இடமளித்தல், மாணவரின் சமூக பொருளாதாரப் பின்னணியைக் கருத்திற் கொள்ளாமை, போன்ற எதிர்மறைக் குணவியல்புகள் பலகாணப்படுகின்றன.

பரீட்சைகள் மாணவர் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதிற் பிரதான பங்கு கொள்வதால், கலைத்திட்டத்திற் பரீட்சைகளின் மிகையாதிக்கங் காணப்படுதலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பிரதேச அரசியல் தொடர்பான தலையீடுகளும், அரசியல் மாற்றங்கள் நிகழும்பொழுது, கலைத்திட்டப் பொருளடக்க மாற்றங்கள் நிகழ்த்தப்படுதலும் அவதானிக்கப் பட்டுள்ளன. ஆசிரியர் இடமாற்றங்களிலே தலையீடுகள் நிகழ்த்தப்படுதலும் கலைத்திட்ட இயக்கத்தைப் பாதிக்கும்.

கலைத்திட்ட இயங்கு நிலையிலே ஆசிரியர் பிரதான பங்கு கொள்வதனால், ஆசிரியர் தம் வேதனங்கள், பதவி உயர்வு, முதலியவற்றிலே மனமுறிவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் கலைத்திட்டத்தின் வினைத்திறனை நிச்சயம் பாதிப்படையச்செய்யும்.

நிருவாக சேவை ஆளணியினரைத் தெரிவு செய்யும் பொழுது காட்டப்பட்ட கவனம், குடியேற்ற நாட்டு ஆட்சியின் பொழுது ஆசிரிய தெரிவிலே காட்டப்படாமை, சுதந்திரத்துக்குப் பின்னரும் அவதானிக்கப்படக்கூடிய பண்பாக விளங்குகின்றது. நிருவாகசேவை ஆளணியினரின் பதவி உயர்வுகளிலே வகுக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு, ஆசிரியர் பதவி உயர்வுகளில் ஏற்படுத்தப்படாத முரண்பாடுகளும் காணப்படுகின்றன.

கலைத்திட்ட இயக்கப்பாட்டில் ஆசிரியர்கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டாலும், ஆசிரியர் கல்வி தழுவாத கற்பித்தலும் இந்நாட்டுக்கலைத்திட்டச் செயற்பாட்டில் இடம் பெற்று வருகின்றன.

போட்டியை ஊக்குவிக்கும் சமூக இயக்கப்பாடுகள், தவிர்க்கவியலாதவாறு கலைத்திட்டத்திலும் பிரதிபலிக்கின்றன. மாணவரிடையே இயல்பாக முனைப்புக் கொள்ள வேண்டிய கூட்டுறவும், நேசமனோபாவமும், எதிர்மறைத்தாக்கத்துக்குள்ளாகி, போட்டியுணர்வுகள் வளர்த் தெடுக்கப்படும் முனைப்பு மேலோங்குகின்றது. மாணவரின் கூட்டத்தினை மேம்படுத்தும், செயற்றிட்டங்களும், பரீட்சைமுறைகளும் ஊக்குவிக்கப்படும் ஏற்பாடுகள் முனைப்புக் கொள்ளவில்லை.

பாடத்திட்டங்கள் வகுத்தலும், அபிவிருத்தி செய்தலும், மத்திய கட்டுப்பாட்டு நிலையத்தின் கீழ் செயற்படும் பொழுது, பிரதேசங்களின் முழுமையான பங்குபற்றல் ஈட்டப்படுமா என்ற கேள்வியும் எழுப்பப்படலாம். குறிப்பாக பிரதேச நெகிழ்ச்சித் தன்மைகள் கலைத்திட்டத்தில் முழுமையாக உள்வாங்கப்படும் ஏற்பாடுகள் உள்ளனவா என்றும் விமர்சிக்கப்படலாம்.

தேசிய கல்வித்திட்டமும், தேசத்துக்குப் பொதுவான கலைத்திட்டமும் நடைமுறைப் படுத்தப்படும் வேளையிற் கட்டணம் அறவிடும் தனியார் கல்விநிலையங்களின் செயற்பாடுகள் தேசிய இலக்குகளை அடைய முற்படுவதாலே அனைவர்க்குமுரிய சமத்துவத்திலே இடர்களை ஏற்படுத்தாதா என்றும் கேட்கப்படலாம்.



# கலைத்திட்டச் செயற்பாடுகளின் இருமைத்தன்மை

பிரித்தானியராட்சியின் பொருளாதாரச் செயற்பாடுகள் தேசிய விளைவுகளைப் பொறுத்தவரை இருமைத் தன்மைகளைக் கொண்டுவிளங்கின. ஒரு புறம் கிராமிய விவசாயத்துறையும், சுயமொழிக்கல்வியும் நலிவுற்றிருந்தன. மறுபுறம் பெருந்தோட்டப்பொருளாதாரமும், ஆங்கிலக்கல்வியும் முன்னேற்றமடையும் சால்புகளைக் கொண்டிருந்தன.

ஆங்கிலப்பாடசாலைகளில் நன்கு பயிற்சி கொண்ட ஆசிரியர்கள், உபகரணவசதிகளோடு கூடிய ஆய்வு கூடங்கள், நூல்நிலையங்கள், விளையாட்டுத்திடல்கள், மேலைத்தேய விளையாட்டு அனுபவங்கள், விடுதிச்சாலைகள், அரங்குகள், போன்ற கலைத்திட்டச் செழுமை நிலைகள் கொள்ளப்பெற்றன. கணிதம், விஞ்ஞானம், உயர்தனிச் செம்மொழிகள், போன்றவற்றைக் கற்கக் கூடிய வாய்ப்பும் இத்தகையபாடசாலைகளிலே காணப்பட்டன.

ஆங்கிலப்பாடசாலைகளிலே முதனிலை கடந்த வகுப்புகள் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும், இலண்டன் பல்கலைக்கழகமும் நடத்திய பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தஞ் செய்து வந்தமையால், அப்பரீட்சைகளுக்குரிய பாடங்கள் கலைத்திட்டத்தில் முதன்மைகொண்டு விளங்கின. இவ்வாறான கலைத்திட்ட அனுபவ ஒழுங்கமைப்பு வாய்க்கப் பெற்றோரே, பல்கலைக்கழகக்கல்வியைப் பெறக் கூடியோராயும், அரசாங்கத்துறை உயர் தொழில்களைப் பெறக்கூடியோராயும் விளங்கினர்.

ஆனாற் சுயமொழிப் பாடசாலைகளில் மேற்கூறிய அமைப்புகளுக்கு முரணான நிலைகள் காணப்பட்டன, பாடசாலைக்கட்ட

டம் மற்றும் அமைப்புவசதிகளிலே வற்கடம் காணப்பட்டது, சுயமொழிப் பாடசாலைகளில் உயர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், பட்டதாரிகளும் கற்பிப்பதற்கென நியமிக்கப்படவில்லை. சுயமொழிப் பாடசாலைகளிற் பௌதிகவியல், இரசாயனவியல், உயர்கணிதம், விலங்கியல், தாவரவியல் போன்ற பாடங்கள் சுயமொழிப் பாடசாலைகளிலே கற்பிக்கப்படவில்லை. சமூக நெருக்கிடைகளில் வாய்ப்பு வசதி குன்றியோரே அக்காலத்திற் சுயமொழிக்கல்வியைக் கற்கநேர்ந்தது.

அனைத்து வயதுவந்தோர் வாக்குரிமையும், தேசிய வாதத்தின் வளர்ச்சியும், தோற்றுவித்த சிந்தனை வீச்சுக்கள் மேற்கூறிய முரண்பாடுகளை அணுகத் தொடங்கின. இந்நாட்டு இசைநடனம், கலை, கைப்பணி ஆகியவை படிப்படியாகக் கலைத்திட்டத்திலே புகுத்தப் பெற்றன. அவ்வாறே வரலாற்றிலும், புவியியலிலும், உள்நாட்டு விவகாரங்கள் சேர்க்கப் பெற்றன.

ஆங்கிலக் கல்வி கற்றோர் எழுதுவினைஞராகவும் வாய்ப்புகள் இருந்தமையால், பெற்றோர் பலர் ஆங்கிலப் பாடசாலைகளிலே தங்கள் பிள்ளைகள் படிக்கவேண்டுமென்று விரும்பியதால், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்கிலப் பாடசாலைகள் திறக்கப்பட்டதாயினும் பாரம்பரியமான ஆங்கிலப் பாடசாலைகளின் அமைப்பு வசதிகளையும் செழுமையான கலைத்திட்டச் செயற்பாடுகளையும் ஈட்டமுடியாதிருந்தது.

1943-ஆம் ஆண்டுச் சிறப்புக் குழுவினரின் அறிக்கையைத் தொடர்ந்து இந்நாட்டுக் கலைத்திட்டப்படி மலர்ச்சியிற் பரவலான பல மாற்றங்கள் நிகழலாயின. இம்மாற்றங்களிற் பிரதானமானது எல்லா மாணவர்க்கும் தாய் மொழியே போதனை மொழியாக்கப் பட்டமையாகும்.

1945-ஆம் ஆண்டு முதலாம் தரத்தோடு தொடங்கிய இம்மாற்றம் 10-ஆம் தரத்திற்குப் பின்னர் பல்கலைக்கழகப் புதுமுக வகுப்புகளிலும், வீறுநடையிட்டுச் சென்றது. மூன்றாம் வகுப்பிலிருந்து அனைத்து மாணவர்க்கும் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டதாயினும், அதன் செயற்பாடு, ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் கிடைப்பதைப் பொறுத்ததாயிருந்தது.

தாய்மொழிப் போதனை, மொழி அடிப்படையிலே காணப்பட்ட இருமைத்தன்மையைப் போக்கியதாயினும் கலைத்திட்டச் செயற்பாடுகள் நகர்ப்புற, கிராமப்புற அமைப்பு வசதிகளின் வேறுபாடுகளினாற் பாதிக்கப்பட்டன. மத்திய பாடசாலைகளின் வளர்ச்சி காரணமாகக் கிராமப் புறங்களிலும், விஞ்ஞானம்,



ஆங்கிலம், தொழில் நுட்பப் பாடங்கள், இசை நடனம், விவசாயம் போன்ற பாட அனுபவங்களை வழங்கக் கூடிய ஏற்பாடுகள் தோன்றின. ஆயினும் இலங்கையின் பொருளாதார அமைப்பிற் காணப்பெற்ற கிராமப்புற நகரப்புற வேறுபாடுகள் தொடர்ந்தும் இயங்கிய வண்ணமிருந்தமையால் அந்த வேறுபாடுகள் கலைத்திட்டத்திலும் பிரதிபலித்தன.

சுதந்திரத்திற்குப் பின்னர் நாம் இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஏட்டுக்கல்விச் செயற்பாடுகள் மிகைகொண்டும், செயற்கல்விச் செயற்பாடுகள் அருகிய நிலையும் பிறிதொரு வகையான இருமைத் தன்மையைப் புலப்படுத்தி நின்றன. அத்தகைய இருமைத்தன்மை சமூக, பொருளாதார முரண்பாடுகளின் நேர் வெளிப்பாடுகளாகவே விளங்கின.

பொது நிறுவனங்களை இயக்கும் தனிச் சொத்துரிமையின் பரந்த செயற்பாடு காரணமாக, பாடசாலையமைப்பிலே தனியார் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள், என்ற இருமைத்தன்மையும் காணப்பட்டது. 1960-ஆம் ஆண்டுக்குப் பின்னர் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றமை, அந்த இருமைத்தன்மையை ஓரளவு மாற்றியமைப்பதற்கு வழி செய்தது. தேசிய கலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கும் இந்த நிகழ்ச்சி வழிகோலியது.

நாட்டை வருத்திய வேலையின்மைப் பிரச்சினை, பொருளாதார உற்பத்தித்திறன் குறைவு, சென்மதி நிலுவை இடர்ப்பாடுகள், ஏட்டுக்கல்வி கற்றோர், ஆடைகசங்காத தொழில்களைப் பெருவிருப்புடன் நாடியமை, என்ற நெருக்கடிகளின் மத்தியிலே இந்நாட்டுக் கலைத்திட்டத்தை மாற்றியும், புதுக்கியும் அமைக்க வேண்டுமென்ற வேட்கை தோன்ற, 1972-ஆம் ஆண்டிலே புதிய கலைத்திட்டம் அறிமுகம் செய்யப் பெற்றது.

கனிஷ்ட இடைநிலை மட்டத்திலே காணப்பட்ட கலை விஞ்ஞானம் என்ற பாகுபாடுகள் ஒழிக்கப்பட்டன. கலை, விஞ்ஞானம், முன்றொழிற் கல்வி, அழகியல் என்ற அனைத்துத் துறைகளும் தழுவிய சமநிலைப் பேறு உருவாக்கப்பட்டது.

அடிப்படையான பொருளாதாரக் கட்டமைப்பிலே மாற்றங்கள் செய்யாமல், தனித்துக் கலைத்திட்ட மாற்றங்களால் மட்டும் பொருளாதார, சமூக அறைகூவல்களைத் தீர்த்துவைக்க முயலுதல் ஒருதலைப் பட்சமானதாகிவிடுகின்றது.

# பாடசாலை என்ற காட்டுரு

பாடசாலை என்ற காட்டுரு சமூகவளர்ச்சிக் கோலங்களிலே துலங்கியெழுந்த வரலாற்றுவிளைவு. அக்காட்டுரு கல்வி ஏற்பாடுகளை இயல்பாயும், இலகுவாயும், வழங்கக்கூடிய பிரதியீடற்ற விளைதிறன் சிக்கனம் மிக்கது. பாடசாலை ஒழுங்கமைப்பின் உட்பொதிந்த கூறுகளாகக் கல்வி இலக்குகள், நுட்பவியல், நியம ஒழுங்கமைப்பு, நியமியல் ஒழுங்கமைப்பு, விழுமியங்கள் ஆகியவை, விளங்குகின்றன. பாடசாலை ஒழுங்கமைப்பு, வாழும் நிகழ்வு பற்றிய பிரக்ஞைகொண்டது.

பாடசாலை என்ற காட்டுரு வடிவமைக்கும் தளத்திலே கலைத்திட்டத்தின் நிகழ்வு நடைபெறுகின்றது. வளரும் தலைமுறையினருக்குச் சமூகம் வழங்கக் கருதிய பல்வேறு திறன்களும் கலைத்திட்ட ஒழுங்கமைப்பின் வாயிலாகப் பாடசாலைகளில் வழங்கப் பெறுகின்றன.

பாடசாலைகளிற் பல்வேறு மாறிகளினூடாகக் கலைத்திட்டச் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. ஆசிரியத்துவமாறி, செயற்பாங்குமாறி, மாணவ மாறி, விளைவுமாறி என்பன அவை. ஆசிரியத்துவமாறி, கல்வி நிலை, சமூகநிலை, ஆண்பெண்வேறுபாடு, வயது அனுபவவேறுபாடு போன்ற மாறிகளைக் கொண்டுள்ளது. வகுத்துக் கொள்ளப்பெற்ற கலைத்திட்ட அனுபவங்கள், அபிவிருத்தியடையும் நாடுகளில், ஆசிரியர்கல்வி பெருந்தோராலும் நிறைவேற்றிவைக்கப் பெறுதலினால் வகுப்பறைச் செயற்பாங்கு மாறிகளிலே வினைத்திறன் வீழ்ச்சியடைகின்றது. வகுப்பறையிற் கற்பித்தலை நிறைவேற்ற, பல்வேறு மூறையியல் மாறிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. மாணவ மாறி பல்வேறு ஆளுமைக் கோலங்களைக் கொண்ட மாணவர் தொகுதியைக் குறிப்பிடுகின்றது.



விளைவு மாறி என்பது ஆழக்கற்றல் அகலக்கற்றலாகவோ, தூயஅறிவு, பிரயோக அறிவு என்ற பிரிவுகளாகவோ, அறிதல் ஆட்சி, உளஇயக்க ஆட்சி உடலியக்க ஆட்சி என்ற ஆட்சிகளாகவோ அமைந்து வேறுபாடு கொள்ளலாம்.

பாடசாலை என்ற காட்டுருவின் ஒழுங்கமைப்புப் பற்றிய பல்வேறு கண்ணோட்டங்கள் முனைப்புக் கொள்ளுகின்றன. பாடசாலைகளை "நிரப்பிநிலையங்கள்" என்று கூறும் ஒரு கருத்தும் உண்டு. பாடசாலைகளைப் பசுமை இல்லங்கள் என்று விளக்கும் வேறொருகருத்தும் உண்டு. சிலர் பாடசாலைகளை "அங்காடிகளாகவும்" கொள்ளுவர். சமூக நோக்கிற் பாடசாலைகளைச் "செயற் கருவிகள்" என்று கூறும் வழக்கும் உண்டு.

பாடசாலைகளை நிரப்பி நிலையங்களாகக்கொள்வோர், மாணவர்களை வெற்றுக் கொள்கலன்களாகக் கருதி, அக்கொள்கலன்களை நிரப்பிவைக்கும் கலைத்திட்டச் செயற்பாடுகளை விதந்துரைக்கின்றனர். இச்செயற்பாடு கற்பித்தலை ஒரு வழிப்பாதையாகவே கருதுகின்றது. பாடசாலையைப் பசுமை இல்லமாகக் கருதுவோர், மாணவரைப் பசுஞ்செடிகளாகக் கொள்வதுடன், அறிவு அகத்திலிருந்து மலர்வதாகவும் விளக்குகின்றனர்.

பாடசாலையை ஒரு செயற் கருவியாகக் கொள்வோர், கலைத்திட்டத்தைச் சமூகமாற்றத்துக்குரிய வலுவான கருவியாகவும், ஆசிரியரை அத்தகைய மாற்றத்தை உருவாக்கும் நிருமாணச் சிற்பிகளாகவும் கருதுகின்றனர். தனிமனிதனை மேம்படுத்துவதன் வாயிலாகச் சமூக மேம்பாடு உருவாக்கப்படும் என்பதைக் கற்பனாவாதம் என மறுத்துரைக்கும் இக்கோட்பாடு, சீரிய சமூக மேம்பாட்டின் வாயிலாகவே தனிமனித அவலங்களும், அந்நியமாதலும் ஒழிக்கப்பெற்று, மனித மேன்மை உணர்த்தப்படும் என்றும் வற்புறுத்துகின்றது.

பாடசாலையை ஓர் அங்காடியாகக் கொள்வோர் கற்றற் செயற்பாடுகளை இருவழிப்பாதையாகக் கொள்வர். பாடசாலை என்ற அங்காடியிற் கொடுக்கல் வாங்கல் செய்யும் முகவராய் மாணவர் இயக்கங் கொள்கின்றனர். இக்காட்டுருவில் இடம்பெறும் கலைத்திட்டச் செயற்பாடுகள் பயன்வழி இயக்க முறைகளைக் கொண்டபிரச்சினை தீர்த்தல், செயற்றிட்டம், போன்ற முறையியல்களுக்கு அழுத்தங்கள் கொடுக்கின்றன.

அறிவைத் தேக்கி நிதியமாக்கும் செயல்முறை தொடர்ச்சியாக முன்னேறிச் செல்லும் வேளையில் ஒவ்வொரு சமூகமும் தனது முன்னேற்றத்தின் பொருட்டு அறிவுநிதியத்தை வெற்றிகரமாகப்

பயன் படுத்திவந்துள்ளது என்று கூறமுடியாதுள்ளது. வரலாற்றுப் போக்கிலே சமூக மேலாதிக்கம் செலுத்தியோர், பாடசாலை ஒழுங்கமைப்பைத்தமது நலன்களை எய்துவதற்குரிய கருவியாகவும் பயன்படுத்திவந்துள்ளனர்.

பாடசாலை ஒழுங்கமைப்பிற் தரவேறுபாடுகளை உட்புகுத்திய குடியேற்ற நாட்டுப்பாடசாலை அமைப்புகள் இவ்வகையில் நினைவு கொள்ளத்தக்கவை.

சமனற்ற வருமானப் பரம்பலின் அதிக வீச்சுக் காரணமாக பாடசாலை ஒழுங்கமைப்பிலே வர்க்கப் பிரதிபலிப்புக் காணப்படுதல் போன்று, பிரதேச ஏற்றத்தாழ்வுகளின் பிரதிபலிப்பும் காணப்படுகின்றது. நகர்ப்புறங்களில் வாய்ப்பும் வசதிகளும் கொண்டபாரிய பாடசாலைகளும், கிராமப்புறங்களில் அவற்றில் வற்கடமும் காணப்படுகின்றன.

மாணவரின் வயது வளர்ச்சிக் கேற்றவாறும், உளவியல் முதிர்ச்சிக்கேற்றவாறும் பாடசாலை ஒழுங்கமைப்பை, முதனிலை, கனிட்ட இடைநிலை, சிரேட்ட இடைநிலை, என்று பாகுபாடுசெய்யப்பட்டாலும், ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவுக்குரிய வளர்ச்சி, இயல்பானதாயும் நெகிழ்ச்சியாயும் இருத்தல் வேண்டும்.

122973



# கற்பித்தல் நுணுக்கங்கள்

கற்பித்தல் என்பது அறிவியல் தழுவிய ஆய்வை உள்ளடக்கிய கலை. அது மாணவரைப் புரிந்துணரும் பண்பையும், ஆக்கத் திறனையும் இணைத்து இயக்கி வைக்கின்றது. கற்பிக்கும் பொருளை ஆக்கத்திறன் தழுவ மாணவர்க்கு வழங்கும் கலையைக் கற்பித்தல் நுணுக்கங்கள் விளக்கும். கற்பிக்கப்படும் பொருள் எத்துணை முக்கியமானதோ அவ்வாறே கற்பிக்கும் கலையும் முக்கியமானது.

கல்விச்சிந்தனைகள் முகிழ்த்த புராதன சிந்தனை மரபுகளிற் கற்பித்தல் நுணுக்கங்கள் பற்றிய சிந்தனைகளும் மலர்ச்சியுற்று விளங்கின. வினா-விடை வாயிலாகக் கற்பித்தல், கதைகள் வாயிலாக உண்மைப் பொருள்களை விளக்குதல், கருத்துக்களைப் பாடல்களில் ஏற்றிக் கூறுதல், கூத்துக்கள், நடன முத்திரைகள் வாயிலாகக் கற்பித்தல், போன்றவை வழிவழி வந்த நமது பாரம்பரியமான கற்பித்தல் முறைகளாகும்.

வர்க்கங்களின் வளர்ச்சியும், தனிச்சொத்துரிமையின் வளர்ச்சியும் அறிவு வழங்கலிலும், கற்பித்தலிலும் எதிர்மறைத் தாக்க விசைகளை வருவித்தன. அறிவுவழங்கப் பெறுவோரின் தாரதம்மியங்கள் சீர்தூக்கிப் பார்க்கப் பட்டன. அறிவு ஒரு சாராருக்கு மட்டும் எனக் குறிக்கப்பட, எழுத்தறிவின்மை வியாபித்தது.

ஐரோப்பிய சிந்தனை மறுமலர்ச்சியும் மக்களாட்சிப் பண்புகளின் எழுச்சியும், மார்க்ஸிய சிந்தனைகளின் வளர்ச்சியும் அறிவு அனைவர்க்குமுரிய பொதுச் செல்வம் என்ற பிரக்ஞையை உருவாக்கின. மாணவரை மத்தியாகக் கொண்டகல்வி புகட்டலும், எவ்வித சுரண்டல்களிலிருந்தும் விடுதலையளிக்கும் சிறுவர் கல்வியை வழங்கலும், வளர்ச்சியுற்றன.

சூழல் வேறுபாடுகளும் தூண்டல் வேறுபாடுகளுமே மாணவர்களது திறன்களில் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றனவன்றி, அனைத்து மாணவர்க்குமுரிய இயற்கை யாற்றல் ஒன்றெனும் உறுதி பெறவேண்டியுள்ளது. இதனால் எந்த மாணவர்க்கும் எந்தகைய அறிவையும் வழங்க முடியும் என்பது வளர்வுறும்.

சமூக பொருளாதாரப் பின்னணி தனியாள் வேறுபாடுகளைத் தோற்றுவித்துள்ளமையால், இன்றைய கற்பித்தல் வெற்றிபெற வேண்டுமாயின் தனியாள் வேறுபாடுகளைத் தழுவிக்கற்பித்தலைச் செலுத்த வேண்டியுள்ளது. பிள்ளைகளின் இயல்பூக்கங்கள், தேவைகள், மனவெழுச்சிகள் என்பவற்றை அறிந்து கற்பிக்க வேண்டியுள்ளது. தனியாள் வேறுபாடுகளிலே பெருமளவுவீச்சுக் காணப்படமாட்டாது என்ற எடுகோளின் அடிப்படையிலே பல்கலைக்கழகங்களில் விரிவுரை முறை பின்பற்றப்பட்டாலும், மீண்டும் தனித்து ஒவ்வொருமாணவரிலும் கவனஞ் செலுத்தப் படவேண்டும்மென்பதற்காக, கட்டுரை வகுப்புக்கள், தனியாய்வுச் செயற்றிட்டங்கள், ஒழுங்கு செய்யப்படுகின்றன.

பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவரிலும் தனித்தனிகவனந் தழுவிய கற்பித்தலை வளர்த்துச் செல்வதற்குரிய உபாயங்களைக் கையாள வேண்டியுள்ளது. ஒவ்வொருமாணவரும் தாமே முயன்று முன்னேறுவதற்குரிய ஒப்படைகள் கொடுக்கப்படல் வேண்டும். இந்நிலையில் மாணவரிடையே தனிமனித உணர்வுகளை வளர்க்காது, கூட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்தும் செயற்றிட்டங்களையும் கற்பித்தலிற் கையாளவேண்டியுள்ளது. ஆக்கச் செயற்றிட்டங்கள், பிரச்சினைச் செயற்றிட்டங்கள், கற்றற் செயற்றிட்டங்கள், போன்ற முதன்மைகளைக் கொண்டுசெயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்தலாம். செயற்றிட்டங்களைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல், மதிப்பிடுதல், என்ற நிலைகளிலே இயக்கிச் சென்று வளம்படுத்த வேண்டியுள்ளது.

இடைநிலைப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் விரிவுரைகளைச் சுருக்கி, மாணவரைக் கற்கச் செய்யும் ஈடுபாடுகளிலே தீவிர கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது. மாணவரைக் கற்கச் செய்வதற்கு அவர்களிடம் இயல்பாக அமைந்துள்ள ஆராய்வூக்கத்தைத் தூண்டி, அவற்றின் வாயிலாகக்கண்டறி முறையை வளப்படுத்தலாம். கற்றற் பொருள்களை ஆசிரியர், நூல்கள், துணைக்கருவிகள், வாயிலாகக் கண்டறிந்து தெளியும் பொழுது கற்றல் இயல்பானதாயும், தாமே உண்மைகளைக் கண்டறிவதனால், மனதில் ஆழ்ந்து பதிவனவாயும் அமைந்து விடுகின்றது.



கற்பித்தலை வளம்பெறச் செய்வதற்குரிய நுணுக்கங்களுள் பிரச்சினை விடுவிப்பதற்குரிய சிந்தனையுருவாக்கம் சிறப்பிடம் பெறும். சிந்தனைக்கு நடுநாயகமாக அமைவது பிரச்சினையாகும். குறித்த பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையிலே சிந்தனை எத்தனிப்புகள் இடைவிடாது இயக்கப்பட்டவண்ணமிருக்க அவற்றின் வழியாகக் கற்றல் வளம் பெறுகின்றது. பிரச்சினை விடுவித்தலோடு தொடர்புடைய சிந்தனைத் தெறிப்புக்களைத் தொகுத்தலும், தள்ளவேண்டியவற்றை தள்ளுதலும், கொள்ளவேண்டியவற்றைக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு பெறப்படுகின்றது.

வகுப்பறையில் மாணவரது ஈடுபாட்டை மேம்படுத்தும் உபாயங்களுள் ஒன்றாக முன்திட்டமுறைக் கற்பித்தல் உதவும். முன்திட்டமுறைக் கற்பித்தல், நிரலித்தகற்பித்தல் என்றும் கூறப்படும். பாடவளர்ச்சியைச் சங்கிலித்தொடர் போன்று அமைத்து, ஒவ்வொரு சட்டத்துக்குமுரிய தூண்டியும், துலங்கலும் கொடுக்கப் படுகின்றன. மாணவர் தூண்டிக்குரிய துலங்கலைக் கண்டுபிடித்து, ஆசிரியராலே தரப்பட்டதுலங்கலுடன் ஒப்பிட்டுப் பார்ப்பர். அவற்றினால், தமது முன்னேற்றத்தையும். வெற்றியையும் அவர்களாலே மதிப்பீடு செய்யப்பட முடியும், மாணவர்க்குக்கிடைக்கும் வெற்றி, கற்றலில் அவர்களை மேலும் ஈடுபடச் செய்வதற்குரிய வெகுமதியாக வளர்ச்சியடையும்.

கற்பித்தல் இலக்குகள் மாணவரது ஆளுமையை நிறைவாக வளர்க்கக் கூடியவகையில் ஒழுங்கு படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பேச்சு, நடிப்பு, உடற்பயிற்சி, திரச் செயல், பிறர்க்கு உதவும் உளமாட்சி, கூட்டுவாழ்க்கை போன்றபண்புகளை மாணவரிடத்துக் கட்டியெழுப்பப்படவேண்டும். கட்புலன், செவிநுகர் சாதனங்களைத் தேவைக் கேற்றவாறு பயன்படுத்திக் கற்பித்தலை இங்கிதமாக்கல் வேண்டும்.

# ஆசிரியத்துவம்

கலைத்திட்டத்தின் வினைத்திறன் ஆசிரியர் வினைத்திறனிலே தங்கியுள்ளது. எவ்வளவு தான் நவீன எலத்திரன் கற்பிக்கும் சாதனங்களைக் கொண்ட வகுப்பறை நிருமாணிப்புக்கள் நடைபெற்று வந்தாலும், ஆசிரியரின்றிக் கற்பித்தற் பணியை நிறைவேற்றி வைக்க முடியாது.

கல்வி, வாழ்க்கைப் போரிலே நின்று நிலைப்பதற்குரிய தலையாய செயல் முறையாதலினால், கற்பித்தல் என்றுமுள்ள தொல் செயலாயிற்று. ஆசிரியரின் தொழில் வாண்மை, சமூக வளர்ச்சியுடன் ஒன்றிணைந்து வந்துள்ளது.

கற்பித்தல் வாண்மை பல்வேறு செயற்பாடுகளினால் வலுப் பெறுகின்றது. கற்பித்தல், நுண்மதிசார்ந்த தொழிற்பாடாக விளங்குதலும், கல்வியை மூலவளமாகக் கொண்டு செயற்படுதலும், குறித்த இலக்குகளை அடிப்படையாகக்கொண்ட அறிவுச் செயற்பாடுகள் நிகழ்தலும், ஒழுங்குபடுத்திய பயிற்சியை அடிப்படையாக உள்ளடக்கியிருத்தலும், வாண்மைக்குரிய வலுவைக் கொடுக்கின்றன.

சட்டவாண்மை, மருத்துவ வாண்மை, பொறியியல் வாண்மை போன்று கற்பித்தல் வாண்மை, ஆழ்ந்து பரந்ததுறையாக விளங்கிடினும். சமூகக் கட்டமைப்பின் சுரண்டல்கள் கற்பித்தல் வாண்மையைப் பாதித்து வந்துள்ளமையைக் காணலாம். கற்பித்தற்பயிற்சியின்றி ஆசிரிய நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதும், ஆசிரியர்க்குரிய சம்பள நிருணய ஆணைக்குழுக்குழுக்களில் ஆசிரியர் இடம் பெறுமையும், கற்பித்தல் வாண்மையைப்பாதிப்பதை இந்நாட்டு உதாரணங்களால் விளக்க முடியும்.

மறுபுறம் கற்பித்தல் வாண்மையை மேலோங்கச் செய்வதற்குரிய பயிற்சி நெறிகள், வாண்மைக் கழகங்கள் முதலியனவும் இந்நாட்டிலே காணப்படுகின்றன.



தொழில் வாண்மை, என்பது உழைப்பவர் என்ற வர்க்க ஒருமைப் பாட்டைச் சிதறடிப்பதற்குரிய தந்திரோபாயமாகப் பயன்படுத்தப்படும் பொழுது, கல்வியின் தலையாய இலக்குகள் சிதைவடைகின்றன. உளத்தொழிற்பாடுகள் மேலோங்கி நிற்கும் தொழில்களைப் புரிவோர் தாம் உடல் உழைப்பவர்களிலும் வேறுபட்ட உயர்ந்தோர் குழாமாகச் செயற்படும் பொழுது, வாண்மை எதிரிடையான இயக்கங் கொள்கின்றது.

கற்பித்தல் வாண்மை கலைத்திட்டச் செயற்பாடுகளைப் பாதிக்கும் என்று கூறும்பொழுது, ஆசிரியர்க்கு வழங்கப்பெறும் பயிற்சி, அவர்களுக்கு அளிக்கப்பெறும் தொழில்முறை சார்ந்த ஊக்குவிப்புக்கள், அவர்களுக்குத் தரப்பெறும் பொறுப்புக்கள், போன்றவற்றின் அடிப்படையிலே விளக்கப்பட முடியும்.

பொதுவாக ஆசிரியர் பயிற்சிக்குரிய கால அளவின் போதாமை முதற்கண் கவனிக்கப்பட வேண்டியுள்ளது. முதனிலைப் பாடசாலைக் கலைத்திட்டத்தைச் செயற்படுத்திப் பாலர் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை கற்பித்தலில் ஈடுபடுத்தப்படுவோர், அதிக கல்வித்தகைமைகளையும், பயிற்சிகளையும் பெற்றிருக்க வேண்டியதில்லை என்ற தவறான அபிப்பிராயம் நிலவுதலும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. அதனால் எமது முதனிலைப்பாடசாலைகளில் வினைத்திறன் மிகு கற்பித்தலை இயற்ற முடியாமலுள்ளது. முதனிலைப் பாடசாலை ஆசிரியர்க்குரிய பட்டங்கள் கொண்ட பயிற்சி நெறிகளைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்க வேண்டியுள்ளது.

பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் பயிற்சித்திட்ட அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்கள், இடைநிலைப்பாடசாலைப் பாடவைப்புப் பற்றியும், தேர்வுக்குரியவாறு மாணவர்களைத் தயாரிக்கும் பணியிற் கவனஞ் செலுத்துதல் பற்றியும், அழுத்தங் கொடுக்கின்றார்களேயன்றி, மாணவர்தம் உள வேறுபாடுகளுக்கியைந்த வகையிலே வினைத்திறன் மிகு வெற்றியான கற்பித்தலுக்குரிய அழுத்தங்களை வலுப்படுத்தவில்லை என்பது சிந்திக்கப்படவேண்டியுள்ளது.

ஆசிரியர் அனைவர்க்கும் பட்டப் பயிற்சியளிக்கப்படும் பொழுது, கல்வித்தர வேறுபாடுகள் குறைக்கப்பட்டு, ஒருங்கிணைப்பு வலுப்படுத்தப்படக்கூடியதாக இருக்கும் நிலையிற் கற்பித்தல் வினைத்திறன் மேலோங்கிச் செல்லும்.

இலங்கையின் அரசியல் நிகழ்ச்சிகள், பண்பாட்டு நிகழ்ச்சிகள், இலக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ஆசிரியர்கள் பிரதான கடமைக் கூறுகளைக் கொண்டு வந்துள்ளமை கற்பித்தல் வாண்மை

6

யைச் சிறப்படையச் செய்து வந்துள்ளது. தேர்தல் காலங்களில் ஆசிரியர்கள் கிராமப்புறப் பொதுசன அபிப்பிராயம் உருவாக்கலிற் பலமுள்ள சக்தியாக இயங்கியமை, 1956 ஆம் ஆண்டில் நிகழ்ந்த அரசியற் சம்பவங்களினுல் உணரப்படத்தக்கதாகவுள்ளது. ஆசிரியர்களின் விசையினுல், இலங்கையிலே தாய்மொழிக் கல்வி வீரியங்கொண்டது. கிராமங்களிற் பண்பாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல், உரையாற்றல், தலைமை கொள்ளல் போன்றவை ஆசிரியர்களினுல் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நாட்டின் பெரும் பாலான எழுத்தாளர்கள் கற்பித்தலில் ஈடுபட்டவர்களாகவும், ஈடுபடுவர்களாகவும், இருத்தல் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஆளுமைப் பரிமாணங்கள் வகுப்பறைகளில் ஆசிரியர் மீதான உருவ நிறைவைச் செய்கின்றன.

ஆசிரியர்களின் அந்தஸ்து, நிலை, செயற்பாடுகள், வாண்மை, சேவை, ஆகியவற்றை உள்ளடக்கும் ஆசிரியத்துவம் புனிதமானது என்று சமூகம் கருதுவதற்குக் காரணம், கல்வி வழங்கும் செயற்பாட்டின் மாட்சியிலிருந்து முகிழ்த்தெழுகின்றது. வரலாற்றுக்காலங்களில் ஆசிரியர்கள் தாம் வழங்கிய சேவைக்குரிய ஊதியத்தைப் பெருமையினுல், இயல்பாகவே மக்களின் அனுதாபத்தைப் பெற்றுவந்தனர். இன்றுவரை அதன் தொடர்ச்சியின் பரிணமிப்பைக் காணமுடியும்.

மாட்சி கொண்ட மாணவர்களை உருவாக்கிய மனநிறைவும், தம்மாணவர்கள் சிறந்தோங்குகின்றனர் என்ற பூரிப்பும், தம்மாலியன்ற சேவையை வழங்கிய உளத்திருத்தியும், ஆசிரியர்களுக்கு எஞ்ஞான்றும் பனிதழுவிய மலர்கள் போன்ற பசுமையை மனத்திலே நிறைவிப்பதுண்டு. அந்த நிறைவை, ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளும் பொழுது கலைத்திட்டத்தின் இயக்கம், ஆற்றலையும், வினைத்திறனையும் தழுவிக் கொள்ளுகின்றது.

♥



# பரீட்சைகள்

கலைத்திட்டச் செயற்பாடுகளோடு ஒன்றிணைந்த உறுப்பாக இயக்கங்கொள்ளும் பரீட்சைகள், கல்விவளர்ச்சியோடு இணைந்த படிமலர்ச்சிகளை உட்கொண்டு வந்துள்ளன. ஆரம்பகாலத்திற் கற்பித்தலின் பெறுபேறுகளை மதிப்பிட்டுப் பின்னூட்டம் செய்யும் எளிமைப் பண்பினதாக விளங்கிய பரீட்சைகள், இன்று மிகவும் சிக்கலான செயற்பாடுகள் தழுவியதாக இயக்கப்படுகின்றன. இன்றைய நவீன பரீட்சைகள் பெருந்தொகையான மாணவர்க்குரியதாகவும், பல்வேறு இலக்குகளுடனும், பொருளாதாரச் செயற்பாடுகளுடனும் இணைக்கப்பட்டதாகவும், கணனிகளின் துணை கொண்டு இயக்கப்படுவதாகவும் காணப்படுகின்றன.

சமூகவரலாற்றிற் கைத்தொழிற்புரட்சியோடு இணைந்த சமூக வளர்ச்சியும், அந்நியமயமாதலும், தனிமனித வேட்கைகளின் வியாபகமும், பரீட்சைகளிலே பிரதிபலித்தன. விருதுகள், முதன்மைகள், வரிசைப்படுத்தல், தரவேறுபடுத்தல், போன்ற தனிமனித இச்சைகளுக்குரிய வேட்டலும் பரீட்சைகளுக்குரிய பணிகளாக்கப்பட்டன. "போட்டிப்பரீட்சைகள்" என்ற சொற்றொடர் அத்தகைய பண்புகளை மேலும் அழுத்திக் கூறுகின்றது. மாணவரின் பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்க்குரிய வேதனம் நிருணயிக்கப்பட்டமை எதிர்மறை வளர்ச்சியை மேலும் எடுத்துக் கூறுகின்றது. அவற்றின் பெறுபேருக, பரீட்சைகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளும் எழத் தொடங்கின.

தெரிவு என்பது மாணவர்களைத் தரம்பிரிக்கத் தொடங்கியமையால், மாணவரிடையே நடத்தை தொடர்பான பிரச்சினைகள் எழத்தொடங்கின. பரீட்சைகள் மனமுறிவுகளையும் ஏற்படுத்தின. அத்தகைய அவல நிலைகளைச் சுட்டிக்காட்டி, 1888ஆம் ஆண்டிற்,

பிரித்தானியாவின் பேராசிரியர்களும், ஆசிரியர்களும் எதிர்ப்புக் கையொப்பங்களை வழங்கி, கல்வி என்பது பரீட்சைகளுக்காகத் தியாகஞ் செய்யப்பட்டுவிட்டதென்றும் குரலெழுப்பினர்.

எழுத்துப் பரீட்சைகள் முழுமையாக ஒருமாணவனின் ஆளுமையை அளவிடமுடியுமா என்பது தொடர்பான ஐயங்கள் நேர்முகப் பரீட்சை பற்றிய கவனத்தையும் ஏற்படுத்தின. ஆயின் நேர்முகப்பரீட்சையின் நம்பகம் தொடர்பாக எழுப்பப்பட்ட விமர்சனங்கள், மாணவன் ஒருவனைத் தொடர் மதிப்பீட்டுக்கு உள்ளாக்க வேண்டும் என்ற கருத்தையும் ஈர்த்தன.

பரீட்சையின் நம்பத்தகு தன்மையை விருத்தி செய்யும் பொருட்டு புறவயமான பரீட்சைகள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன. புதுமுறைப் பரீட்சைகள் என்று அழைக்கப்படும் புறவயமான பரீட்சை முறைகள் இருதுறைகளிற் புறவயத்தன்மையைப் புகட்டுகின்றன. ஒரு புறம் புள்ளியிடுவோரின் அபிப்பிராய பேதங்களை நீக்க முயல்கின்றன. புள்ளியிடுவோர் யாராயிருப்பினும் அவர்களின் அகவய மதிப்பீடுகள் தவிர்க்கப்பட முடிகின்றன. மறுபுறம் மாணவர்க்கு விடையளித்தல் தொடர்பான திட்டவட்டமான விடைகள் தரப்படுகின்றன.

புதுமுறைப் பரீட்சைகளிற் புள்ளியிடல் இலகுவானதாயும் விரைந்தும் செயற்படுத்தப்படக்கூடியதாக இருப்பதுடன், உருப்படிப் பகுப்பு ஆய்வு, உருப்படிக்கடினம், என்பவற்றைப் பற்றிய ஆய்வு முதலியவை இலகுவானதாகின்றன. உருப்படிப் பகுப்பு ஆய்வுகள் கற்பித்தலின் பெறுபேறுகளை அறிவதற்கும், பின்னூட்டம் செய்வதற்கும் துணையாக இருக்கின்றன.

கல்வியின் நோக்கங்கள் மாணவரின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களாக விளங்கிய ஆய்வாளர்கள், நோக்கப் பகுப்புக்களை, அறிவு, புரிந்துகொள்ளும் திறன், பிரயோகம், பகுப்பு, தொகுப்பு என விளக்கியுள்ளார்கள். அறிவு என்ற பகுப்பில், குறியீடுகள், அடிப்படைத் தத்துவங்கள், பொது விதிகள் முதலியவற்றை நினைவு கொள்ளும் திறன் அடங்கும். புரிந்துகொள்ளும் திறனில் பொருள் விளக்கமும், பொருள் அனுமானமும் இடம்பெறும். ஒன்றோடொன்று தொடர்புடைய ஒத்த பண்புகளின் தொடர்புகளை ஆராய்தல் பகுப்பு எனப்படும். பயனுள்ள விடயங்களைத் தொகுத்தும் புது உருவாக அமைத்தலும் தொகுப்பு எனப்படும். இவற்றுடன் கொடுக்கப்பட்ட ஒன்றைச் சீர்தூக்கி ஆய்ந்து அபிப்பிராயம் தெரிவித்தல் என்பதோடு தொடர்புடைய மதிப்பிடுதலை



யும் நோக்கப் பகுப்புள் ஒன்றெனக் கொள்ளமுடியும். இவற்றை உள்ளடக்கியதாகப் பரீட்சைகளை ஒழுங்குபடுத்த முடியும்.

பொதுவாகக் கட்டுரை வகைச் சோதனைகள் உறுதி குறைந்தவை என்று கொள்ளுதல் தவறாகும். கட்டுரைவகைச் சோதனைகளையும், அவற்றை அமைக்கும் முறைகளால் உறுதிபெறச் செய்யலாம். கட்டுரை வினாக்களிற் சீரிய அமைப்புக்களை வரையறுத்தல், விடையளிக்கப்பட வேண்டிய உட்பிரிவுகளைப் பகுத்தும் விரித்தும் உள்ளடக்குதல், விரிவான புள்ளியிடும் திட்டங்களை வழங்குதல், போன்றவற்றாற் கட்டுரைவகைச் சோதனையின் உறுதியை மேம்படுத்தலாம்.

பரீட்சை நிர்வாகம், கல்வி நிர்வாகத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்படுதலும், அவற்றிலே, கலைத்திட்டத்தின் செயலாற்றுநர்களாகிய ஆசிரியர்களுக்குப் பிரதான இடம் அளிக்கப்படுதலும் குறிப்பிடப்படவேண்டியுள்ளது. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுதல் மாத்திரமன்றி, பரீட்சைகளைத் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், ஒழுங்குபடுத்துதல், செயற்படுத்துதல், பின்னூட்டம் செய்தல் ஆகியவை என்றும் கலைத்திட்டத்தின் ஒடு பாதையிலே செயற்படவேண்டியுள்ளன.

122973

# பாடநூல்கள்

அனுவலுப் போன்று பாடநூல்களும் தவறான செயல் வழிகளில் இட்டுச் செல்லப்படுகின்றன என்று கலைத்திட்ட இயங்கு நிலையிற் பாடநூல்களின் எதிர்மறைப்பயன்பாடுகள் எடுத்துக் கூறப்படுகின்றன.

கலைத்திட்டச் செயற்பாட்டில் மானுடம் கண்ட அறிவு நிதியங்களும், அனுபவத்திரள்களும் பாடங்களாகத் தொகுத்தும், வகுத்தும் கொடுக்கப்படுகின்றன.

பாடநூல்கள் தமக்கெனவுரிய நீண்ட கல்விப் பாரம்பரியங்களின் வளத்தில் வேர்கள் பரப்பியுள்ளன. உலகப் பண்பாட்டின் உற்பத்தி மலர்கள் என்று விளக்கப்பெறும் புராதன கிரேக்கத்திலும், ரோமாபுரியிலும் பாடநூல்கள் உபயோகிக்கப்பட்டமைக்குச்சான்றுகள் உள்ளன.

ஐரோப்பாவின் மறுமலர்ச்சிச் சிந்தனைகளுடன் இணைந்ததாக, மாணவரின் உளவளர்ச்சிப் பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டு படி நிலை வளர்ச்சிப் பாடல்களை அமைக்கும் முயற்சிகள் அரும்பி மலரத்தொடங்கின.

அச்சுக்கலையின் வளர்ச்சி, அகநூல் வளர்ச்சி, சிறுவர்களின் சுயாதீனத்தை வற்புறுத்தும் சிந்தனைகளின் வளர்ச்சி, பழைமையின் வழிநின்று புதுமையைக் காணும் திறன், ஆகியவை பாட நூலாக்கத்திலும், பிரயோகத்திலும் படிமலர்ச்சிகளை ஏற்படுத்தி வந்துள்ளன. சமூக வளர்ச்சிக் கோலங்கள் பாட நூல்களின் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் புதிய புதிய கலைத்திட்டத் தேவைகளுக் கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டிய தவிர்க்கவியலாத்திறன்களை வளர்த்தன. தமிழில் அவ்வாறான தேவைக்கு



முதலில் முழுமையான வடிவங்கொடுத்துப் பாட நூலாக்கஞ் செய்த பணி ஆறுமுகநாவலர் அவர்களால் நிறைவேற்றிவைக்கப் பட்டது.

பாடநூல்கள் கற்றல் நெறியின் உள்ளடக்கத்தை வளப் படுத்தும் நோக்குடன் அமைக்கப்பெற்ற எழுத்தோவியங்களாய் மாணவர்க்கு வழிகாட்டுகின்றன. எண்ணக்கருக்கள், தரவுகள், பொதுமையாக்கங்கள், ஆகியவற்றைப் பாடநூல்கள் பொதிந்து நிற்பதுடன், அவற்றில் இடம் பெறும் உளநூல் தழுவிய பயிற்சிகள், கற்றல் நடவடிக்கைகளை மீளவலியுறுத்தும் சாதனங்கள் போன்றவை பாடநூல்களை ஏனைய நூல்களினின்றும் வேறுபடுத்திக் காண்பிப்பதற்குரிய சரங்களாக விளங்குகின்றன.

பாடநூல்கள் ஒவ்வொரு வகுப்புப் படிநிலைக்குமுரிய குறித்த பாடங்களின் தகவற்களஞ்சியமாகவும், மாணவரது மொழி வீச்சை அடிச்சரடாகக் கொண்டு நிருமாணம் செய்யப் பெற்ற பாட வளர்ச்சிகளைக் கொண்டதாகவும் அமைக்கப் பெறுகின்றன. மாணவர் தாமாகவே முயன்று கற்பதற்குரிய உளத்துணிவை மலரச் செய்தல் பாடநூல்களின் இயங்கு நிலைச்சாதனையாகும்.

வளர்வுறும் நாடுகளிற் கற்பித்தலுக்குரிய சாதனங்கள் ஒப்பீட்டளவில் வளராத நிலையிற், கலைத்திட்டத்தின் இயக்கப்பாட்டிற் பாட நூல்கள் அதீத முக்கியத்துவமாக்கப்படுகின்றன. பரீட்சைகள் மிகையாதிக்கஞ் செலுத்துஞ் செயற்பாடுகளிடையே, எதிர்மறைக் கோலங்கள் வளர்ச்சியுற்று, பரீட்சை இலக்கைமட்டும் கொண்ட குறிப்பு நூல்கள், வழிகாட்டிகள், பயிற்சி நூல்கள், கைந்நூல்கள் போன்றவை தயாரிக்கப்பட்டாலும் அவை, பாட நூல் என்ற செழுமையான நயப்புக்கு உள்ளாகா.

உற்பத்திப்போட்டி நிலவும் சமூகவமைப்பிலே, சமூகத்தின் விற்பனைப் பொருளாக மாற்றப்படும் பாடநூல்கள், பரீட்சை இலக்குகளுக்கு மிகையழுத்தங் கொடுத்து விற்பனைச் சந்தைகளைச் சம்பாதிக்க முயலுதல் உண்டு.

பாட நூல்களைப் பற்றிய முழுமையான விளக்கத்தைப் பெற அவற்றைப் பண்புநிலை, பிரயோகநிலை என்ற இருகோணங்களிலே விளக்க முடியும். பண்புநிலை என்று கூறும் பொழுது, பாடநூல்கள் பிள்ளைகளின் உளவளர்ச்சிக் கேற்றவாறும், பாட அடைவுகளின் தொடர்ச்சிக்கேற்றவாறும், படிமுறைப் பண்புடையதாக ஆக்கப்பட்டுக், கருத்துக்களையும் அனுபவங்களையும் எண்ணக் கருக்களையும், தெளிவானதாயும், சமகாலத்துக்குப் பொருந்துவன

வாயும் முன்வைத்தல் வேண்டும் பாடங்களுக்குரிய உள்ளடக்கம் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதுடன், ஒன்றிணைந்த இணைப்புச் சரடுகள் தொடுக்கப்படல் வேண்டும்.

கருத்துக்களை விளக்குவதற்கும், மீள வலியுறுத்துவதற்கு முரிய விளக்கப் படங்கள், ஒளிப்படங்கள், அட்டவணைகள், தரவுகள் இடம் பெறல் வேண்டும். முறையியலின் புதிய நுட்பங்கள், உளநூற்கண்டுபிடிப்புக்கள், புதுமுறை அடைவு மதிப்பீடுகள் என்பவற்றை உட்கொள்ள வேண்டிய பாடநூல்கள், நிஜ வாழ்வுடன் மாணவனைச் சங்கமிக்கச் செய்தல் வேண்டும்.

பிரதேசச் சித்திரிப்பு, சிறுபான்மை இனங்கள் பற்றிய சரியானபுனைவு, மானுடநேயம், உலக நோக்கு ஆகியவை பாடநூல்களுக்கு அணிகலன்களாகும். அரசு, மாணவர்களிடத்துக் கருத்தேற்றஞ் செய்வதற்குப் பாடநூல்களைப் பயன்படுத்த முனைவதும் சமூகக்கட்டமைப்புடன் இணைத்து நோக்கப்படவேண்டிய தொன்றாகும்.

பிரயோகநிலை என்ற கற்பித்தற் கோணத்திற் பாடநூல்களை அணுகும் பொழுது, அவை கற்பித்தலை இலகுபடுத்தி, கற்பித்தலில் வினைத்திறன்களை ஏற்படுத்தக்கூடிய கிளர்மின் வலுப் போன்ற ஆற்றல்களைக் கொண்டிருத்தல் வேண்டும். கலைத்திட்டச் செயற்பாட்டில் மேலும் வெகுமதிகளை ஏற்படுத்தக்கூடிய பணிகளிலே ஆசிரியர்கள் ஈடுபடுவதற்கு அவகாசத்தை வழங்குதல் பாடநூல்களின் மறைமுகமான நலன் என்றும் விளக்கப்படுகின்றது. கற்பித்தலை ஒழுங்கமைந்த முறையிலே தொடர்பு படுத்தவும், மாணவர்தாமாகவே முயன்று கற்றலுக்குரிய உளப்பக்குவத்தை நிலைப்படுத்தவும், பயிற்சிகள்வாயிலாக அடைவுகளை முன்னேற்றவும், வல்ல ஏற்பாடுகளைப் பாடநூல்கள் பிரயோக நலன்களாகக்கருதப்படுகின்றன. ஆயின் வகுப்பறைச் செயற்பாடுகள் மிகுதியாகப்பாடப் புத்தகங்களிலே தங்கியிருக்கும் நிலை ஒருவித சமநிலைப் பிறழ்வென்றே கொள்ளவேண்டும்.



# பாடசாலை நூல்நிலையங்கள்

கலைத்திட்டச் செயற்பாடுகளை முழுமையாக உருவாக்குஞ் சாதனங்களுள் நூல் நிலையங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அனைத்துவயது வந்தோர் வாக்குரிமையைத் தொடர்ந்து இந்நாட்டிற் கல்விக்கொள்கைகளை நிர்ணயிப்பதில் சம்பந்தப்பட்டிருந்தவர்களெல்லாரும், பாடசாலைகளில் நூல்நிலையங்கள் இருக்க வேண்டியமையின் அவசியத்தைப் பலகால், வற்புறுத்தி வந்துள்ளனர்.

அறிவுப் போராட்டத்திற்கான படைக்கலன்கள் செய்யும் படைவீடு நூலகம் என்று இங்கர்சால் ஒரு சமயம் குறிப்பிட்டார். "இக்கால உண்மைப் பல்கலைக்கழகம் நூல்களின் தொகுதிதான்" என்று கார்லைல் விளக்கினார். இல்லங்களிலிருந்து இரும்பு உருக்குத் தொழிற்சாலை வரை நூலகங்கள் அமைக்கப்படவேண்டியமையின் முக்கியத்துவம் உணரப்பட்டுவரும் வேளை பாடசாலைகளில் நூல்நிலையங்களின் இன்றியமையாத்தேவை கூறித்தான் புலப்படுத்தப்பட வேண்டிய தொன்றல்ல.

பொதுநூலகம், பல்கலைக்கழக நூலகம், விசேட நூலகம், தேசியநூலகம், பாடசாலைநூலகம் என்றவாறு நூலகங்கள் பாகுபாடு செய்யப்படும் பொழுது, நூலகங்களிடையே பொதுப் பண்புகள் இருப்பதுடன் சிறப்புப் பண்புகளும் உள்ளீடு கொள்வதைக் காணலாம்.

கலைத்திட்டச் செயற்பாடுகளை முழுமைப்படுத்தி மாணவர் தமது முழுமையான கல்வி விருத்திக்குப் பொருத்தமான நூல்களை வழங்குதல் பாடசாலை நூலகங்களின் பிரதான பணியாகும். கலைத்திட்டத்தைக் கருத்திற் கொண்டு, மாணவரது கல்வி அனுபவங்களைத் தழுவிக்கொண்ட முழு ஆளுமை விருத்திக்குரிய, பாடநூல்கள், துணைப்பாட நூல்கள், உசாத்துணை நூல்கள், விலை உயர்ந்த நூல்கள், முதலியவற்றைப் பாடசாலை

நூல்நிலையங்கள் வழங்கவேண்டியுள்ளன. மாணவர்க்குரிய நாளிதழ்கள், சஞ்சிகைகள் முதலியனவும் பாடசாலை நூல்நிலையங்களிலே இடம் பெறவேண்டியுள்ளன.

பாடசாலை நூல்நிலையங்களை ஏனைய நூல்நிலையங்களிலிருந்து வேறுபடுத்தும் பிரதான பண்பு, ஆசிரியரின் கடமைக் கூறுகளிலிருந்து விளக்கப்படக் கூடியதாகும். வாசிப்புப் பயிற்சியைத் தூண்டுதல், வாசித்த நூல்களை விமர்சித்தல், பல்வேறு நூல்களை மேற்கோளாகக்காட்டல், நூல்களிற் கவர்ந்த பகுதிகளை வாசித்துக் காட்டல், நூல்களிலுள்ள விளக்கப்படங்களை எடுத்துக் காட்டல், முதலியவற்றால் மாணவரின் வாசிப்புத்திறனை ஆசிரியர் தூண்டுதல் வேண்டும். நூலகரையும், மாணவரையும் இணைத்து வைக்கும் பாலமாகவும் ஆசிரியர் செயற்படுவதுடன், காலத்துக்குக்காலம் பாடசாலை நூலகத்துக்குரிய சேர்ப்பனவுகள் பற்றியும் பரிந்துரைத்தல் வேண்டும்.

பாடசாலை நூலகம் கிளையமைப்பைக் கொண்டிருத்தல் செயலாற்றுப்பரவலுக்கு உறுதுணையாகும். அதாவது பிரதான நூல்நிலையத்துடன் இணைந்த வகுப்பு நூலகக்கிளைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுடன், வகுப்பு நூல்நிலைய நிர்வாகப்பயிற்சியும், பொறுப்பும், மாணவர்க்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பாடசாலை நூலகங்கள் நூல் சேகரிக்கும் பயிற்சி, நூற்பாதுகாப்பு முயற்சி முதலியவற்றையும் மாணவரிடத்து வளர்க்க முயற்சிக்க வேண்டும். நூற்பாதுகாப்பு முயற்சி, தேசிய செல்வங்களைப் பாதுகாக்கும் முயற்சியாகப் பரிணமிக்க வேண்டும்.

நூல்கள் இருப்புப்பூட்டுக்களுக்கு உள்ளடக்கப்படாதவையாய், இலகுவில் அணுகக் கூடியவ்வகையில் வைக்கப்பட்டிருப்பதோடு, டூயி, தசம ஒழுங்குவைப்பு முறைபற்றிய அறிவும் மாணவர்க்கு வழங்கப்படுதல் இன்றியமையாததாகும். நூலக ஒழுக்கம் கலைத்திட்ட ஒழுங்காற்றுகையின் கீழ்க்கொண்டு வரப்பட்டு, நூல்கள் ஒழுங்கு குலைத்து வைக்கப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். இடம் மாறிவைக்கப்பட்ட நூல்கள், மறைந்த நூல்கள் என்ற மனோபாவம் மாணவர்க்கு அறிவுறுத்தப்படல் நன்று.

பாடசாலை நூல்நிலையங்கள் கூட்டு முயற்சியை மீள வலியுறுத்தவேண்டியுள்ளன. நூலகத்தைக் கூட்டாக வளர்த்தல், பராமரித்தல், பயன்படுத்துதல், பாதுகாத்தல் என்பவை கருத்திற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. பாடசாலைக் கலைத்திட்டம் கூட்டுமுயற்சியின் அடிப்படையிலே புத்தகப் பண்பாட்டை மாணவர்களிடத்து வளர்த்துச் செல்லல் வேண்டும்.



சமகாலநிகழ்ச்சிகள், உலக விவகாரங்கள், அறிவியல் வளர்ச்சி, முதலியவற்றோடு தொடர்புடைய காட்சித் தொகுப்புக்களையும் பாடசாலை நூல்நிலையங்கள் ஏற்படுத்தவேண்டியுள்ளன. நூல்கள் மாத்திரமன்றி, கண்காட்சிப் பட அட்டைகள், ஒலிப்பதிவுகள் படச்சுருள்கள், வழுக்கிகள், போன்றவற்றையும் பாடஅனுபவங்களுக்கு இயைந்ததாகப் பாடசாலை நூல்நிலையங்களிலே சேர்த்து வைக்க வேண்டியுள்ளன. பாடசாலையின் வளர்ச்சியும், வரலாறும், மாணவர்சாதனைகளும், பாடசாலை நூலகத்தில் இடம் பெறல் வேண்டும்.

பாடசாலை நூலகத்தின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகக் கருதத்தக்கது, அயற்பிரதேசம் பற்றிய தொகுப்பாகும். பாடசாலைச் சூழலின் புவியியல், பண்பாடு, தொழில்கள், மக்கள் வாழ்நிலை இலக்கங்கள் தொடர்பான நூல்கள், தட்டச்சுப்பிரதிகள், படங்கள், முதலியவை தொகுக்கப்படல் வேண்டும். சூழல் பற்றிய ஆய்வின் நிலைக்களனாகப் பாடசாலைகள் விளங்க வேண்டுமென்பது பாடசாலை நூலகங்களால் மெய்ப்பிக்கப்படல் வேண்டும். பாடசாலை சமூகத்தின் மாதிரி உருவம் என்பது பாடசாலை நூலகத்தாற் புலப்படுத்தப்படல் நன்று.

விடுமுறைக் காலங்களிலும் பாடசாலை நூலகங்கள் திறக்கப்பட்டிருத்தல், இயக்கமுள்ள கற்றற் பணிகளை உருவாக்கும்.

# வானொலி

பத்திரிகையும், திரைப்படமும், தொலைக்காட்சியும், பார்ப்போரின் கண்களுடன் ஒட்டி நிற்க வேண்டிய தொடர்பு நிலை வழியாக ஊட்டம் பெறவேண்டிய இறுக்கமான பந்தத்தை நெகிழச் செய்து, வானொலிப் பெட்டியைப் பார்க்காவிடினும், காதுகளினூடாகப் புகுந்து கருத்து நயம் தரவல்ல பலம் வானொலிக்கு உண்டு. செவிவழிச் செல்லும் ஒலி, ஒவ்வொருவரதும் நயப்புக்கேற்ப கற்பனைக் கோலங்களையும், அகவுருவங்களையும் மனத்திலே உருவாக்கும். அதனால் வானொலிக்கதாபாத்திரம் ஒன்றிற்குப் பல்வேறுமுகத் தோற்றங்கள் உண்டு என்றும் கூறலாம்.

வளர்முக நாடுகளின் வகுப்பறைக்கற்பித்தலை வளப்படுத்த வல்ல சாதனங்களில் வானொலிக்குத் தனித்துவமான பணிகள் உண்டு.

அனைத்து வயதுவந்தோர் வாக்குரிமையால் முன்னேறிச் சென்ற மக்களாட்சி மரபுகள், கிராமப்புறப் பாடசாலைகளுக்கும், சனசமூக நிலையங்களுக்கும், இலவசமாக வானொலிப் பெட்டிகளை வழங்கும் மரபுகளைத் தோற்றுவித்தது. குறைந்த விலை வானொலிப் பெட்டிகளின் உற்பத்தியும், மின்கலங்களினால் இயக்கப்படக் கூடிய பாங்கும், வானொலியை அனைவர்க்குமுரிய சாதனமாக்கி வருகின்றது.

இலங்கைத் தந்தித் திணைக்களம் 1923 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பலிலிருந்த வானொலிச் சாதனங்களைப் பயன்படுத்திப் பரிசோதனை முறையான ஒலிபரப்பை இந்நாட்டில் ஆரம்பித்தது. இலங்கையின் ஒழுங்கான ஒலிபரப்புச் சேவை 1925-ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பட, இந்தியாவின் ஒழுங்கான ஒலிபரப்பு 1927 ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சி பெறலாயிற்று.



ஆரம்பகாலத்தில் இலங்கை வானொலியின் உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பதில் ஆய்வறிவாளர்கள் பெரிதும் பங்கு கொண்டனர். முதலியார் சி. இராசநாயகம், திரு. எஸ். பரராஜசிங்கம், திரு. எஸ். நடேசன், சேர். கந்தையா வைத்தியநாதன் போன்றோர் மேலைத்தேய ஒலிபரப்பு முறைகள் பற்றிய உணர்வு கொண்டவர்களாக இருந்ததுடன், அவர்களின் செயற்பாடுகள், பண்டைய கலை இலக்கிய இசைமரபுகளைப் பாதுகாக்கும் தொல் பொருட்சாலையாக வானொலியை அமைப்பதற்குரிய முயற்சிகளுக்கு அழுத்தங் கொடுத்தன.

1941-ஆம் ஆண்டு சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நியமிக்கப் பெற்ற ஒலிபரப்புப்பற்றிய சிறப்புக்குழு, கிராமிய ஒலிபரப்பு, கல்வி ஒலிபரப்பு போன்றவற்றைக் குறிப்பிட்டு வானொலியின் பிரயோகத்தன்மையை மேலும் வற்புறுத்தியது.

இந்நாட்டின் தமிழ் இலக்கிய பாரம்பரியங்களை முன்னெடுத்துச்செல்வதில் வானொலி கணிசமான பங்களிப்பைச் செலுத்தியது என்று கூறும்பொழுது, மரபுவழி வந்த தமிழறிவும், ஆங்கில இலக்கியங்களின் அறிவும், காத்திரமான நுட்புணர்வுகளும் வாய்க்கப்பெற்ற சோ. சிவபாதசுந்தரம், இணுவை இ. இரத்தினம், நாவற்குழியூர் நடராசன் ஆகியோரது பங்களிப்புகள் விதந்து குறிப்பிடத்தக்கன.

1968-ஆம் ஆண்டுக்குப் பின்னர் சமகாலக் கலை இலக்கியங்கள், அகிலத்தரிசனம், அறிவியல்நோக்கு, சமூகவேட்கை, பற்றிய அணுகுமுறைகள், பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் கா. இந்திரபாலா, எச். எம். பி. முகைதீன், இ. முருகையன், த. சுந்தரலிங்கம், தாசீசியஸ், கலாநிதி சண்முகரத்தினம், கலாநிதி அ. சண்முகதாஸ், போன்றோர் குறித்த நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்றமையைத் தொடர்ந்து பரவலாக வளர்ச்சி பெற்றன.

1972-ஆம் ஆண்டிலே புதிய கல்வித்திட்டம் செயற்படத் தொடங்கியமையைத் தொடர்ந்து, கலைத்திட்டத்தை வளம்படுத்துவதிற் கல்வி ஒலிபரப்பு வினைத்திறன் மிக்க செயலாற்றுகையைத் தொடர்பு படுத்தியது. கல்வியமைச்சும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்விச் சேவையும் இணைந்து ஆசிரியர்கள், பாடநூலாக்கக் குழுவினர், ஆகியோரைப் பயன்படுத்திப் பயனுள்ள பாட அனுபவங்களைப் பாடசாலை நேரத்திலும், மாலையிலும் ஒலிபரப்பின.

அரச. ஐயாத்துரை அவர்களின் தயாரிப்பில், சு. வே, த. கனகரத்தினம் ஆகியோர் தமிழ்ப்பாட நிகழ்ச்சிகளையும், அம்பி, கோணேசபிள்ளை ஆகியோர், கணித நிகழ்ச்சிகளையும், திரு. எஸ். தட்சணாமூர்த்தி, திரு. சாமுவேல், திருமதி சபாரத்தினம், திரு. செல்வரத்தினம், ஆகியோர் அறிவியல் நிகழ்ச்சிகளையும், திரு. ரி. ஆர். இராஜலிங்கம், சபா. ஜெயராசா ஆகியோர் சமூகக் கல்வி நிகழ்ச்சிகளையும் வழங்கினர்.

ஆரம்ப நிலைக் கலைத்திட்டம், கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை, என்றிவற்றின் கலைத்திட்டங்களை வளம் படுத்துவதற்குரிய கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் தயாரிக்கப் பெற்றன. 'யூனிசெவ்' நிறுவனம் பாடசாலைகளுக்கு இலவசமாக வானொலிப் பெட்டிகளை வழங்கியமையும், பாடசாலைகள் தமக்குரிய நேரசூசிகளைத் தயாரிப்பதற்கு முன்னதாகவே, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கல்விச்சேவையினர் தமது ஒலிபரப்பு நேரசூசியைப் பாடசாலைகளுக்குவழங்குதலும், கல்வி ஒலிபரப்பைக் கலைத்திட்டத்துள் வருவிப்பதற்கு அனுகூலமாகவுள்ளன. ஆசிரியர் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகக் கல்வித்துறைகளிலும், கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள், விமர்சனம் செய்யப்பட்டுப் பின்னூட்டல் பெறுவதற்குரிய ஒழுங்குகளும் செய்யப் பெற்றுள்ளன.

ஆயினும், இலங்கைப் பாடசாலைக் கலைத்திட்டத்தைச் செழுமை கொள்ளச் செய்வதில் இன்னமும் வானொலி முழுமையான பங்கைச் செலுத்தவில்லை என்று கூறமுடியும். வானொலிப் பெட்டிகள் இல்லாத பாடசாலைகளும், வானொலியைப் பயன்படுத்த முடியாத நிலையிலுமுள்ள பாடசாலைகளும் காணப்படுகின்றன. வாரத்தின் எல்லா நாட்களிலும் கல்விச்சேவைத் தமிழ் ஒலிபரப்போ, சிங்கள ஒலிபரப்போ தொடர்ச்சியாக நிகழ்வதில்லை. வர்த்தக சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் சக்தி வாய்ந்த ஒலிபரப்பிகள், பாடசாலைக் கல்வி ஒலிபரப்புக்குப் பரவலாகப் பயன்படுத்தப் படுவதில்லை. பொதுவாக, வளர்முக நாடுகள் எதிர் நோக்கும் கல்வி ஒலிபரப்புத் தொடர்பான இடர்ப்பாடுகள் இலங்கையிலும் காணப்படுகின்றன.



# தொலைக்காட்சி

கற்பித்தற் சாதனங்களிலே மிகவும் இரம்மியமானது தொலைக்காட்சி. வண்ணங்களாற் கட்புல இன்பமும், ஓசைகளினாற் செவிவழி இன்பமும், அசைவுகளினால் தொடர்புநிலை இன்பமும், ஒருங்கே தொலைக்காட்சியினால் ஊட்டப்பெறுகின்றன. தொலைக்காட்சியுடன் இணைந்த 'வீடியோ' சாதனம் பாட வளர்ச்சியிலே பயனுள்ள பணிகளைப் புரியவல்லது. அனுபவப் பகுதிகளைத் தேக்கிவைக்கவும் மீளவும் பயன்படுத்தப்படக்கூடிய சால்பும் காணப்படுகின்றன. நூல் நிலையத்திலே நூல்களைக் களஞ்சியப் படுத்துவதுபோன்று வீடியோப் பதிவுகளையும், களஞ்சியப் படுத்திப் பயன்படுத்த முடியும்.

தொலைக்காட்சி எவ்வகையிலும் ஆசிரியருக்குப் பிரதியீடாக மாட்டாது. ஆசிரியரின்றி தொலைக்காட்சியால் மட்டும் தனித்துக் கலைத்திட்ட இயக்கப்பாடுகளை முன்னெடுத்துச் செல்லமுடியாது.

கலைத்திட்ட அனுபவங்களுக்கேற்ற தொலைக்காட்சிப் படங்களைத் தயாரிப்பதில் ஆசிரியர்கள் முழுமையாகப் பங்குகொள்ள வேண்டியுள்ளது. தொலைக்காட்சிப் பிரதிகளை எழுதுதல் தயாரிப்பாளருடன் இணைந்து காட்சிக் கோலங்களைத் தெரிந்தெடுத்தல், தொழில்நுட்பவியலாளருடன் இணைந்து, படமாக்கல், வழுக்களை நீக்கி முழுமையாக்கல், விமர்சனங்களின் வழி காட்சிகளைத் திருத்தியமைத்தல் ஆகிய பணிகள் தனியொருவரால் நிறைவேற்றி வைக்கப்படமுடியாத நிலையிற் கூட்டுமுயற்சியை வற்புறுத்துகின்றன. கலைத்திட்ட ஆக்கமும், செயற்பாடும், தனியொருவரால் இயக்கப்பட முடியாத கூட்டுழைப்பின் மாண்பை எடுத்துக் கூறுவதைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மீளவலியுறுத்தல் செய்கின்றன.

அபிவிருத்தியடையும் நாடுகளைப் பொறுத்தவரை தொலைக் காட்சி இன்னமும் பலம்மிக்க கற்பித்தற் சாதனமாக அமைய வில்லை. அதனை அமைத்து இயக்குவதற்குரிய செலவுகள், வானொலி யமைப்புகளிலும் பார்க்க அதிகமானவை மட்டுமன்றி மின்மய மாக்கப்படாத கிராமங்களில் தொலைக்காட்சியை அமைத்தலும் கடினமாகின்றது.

இலங்கையிலே தொலைக்காட்சி க. பொ. த. உயர்தர வகுப்பு விஞ்ஞானப் பாடங்கள் சிலவற்றைக் கற்பிப்பதற்கு மாத்திரம் துணைச்சாதனமாகப் பயன் படுத்தப்படுகின்றது. க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞான ஆசிரியர்கள் பற்றாக்குறை யாகக் காணப்படும் நிலையை தொலைக்காட்சியின் உபயோகத் தால் நீக்கிவிட முடியும் என்ற கருத்து, தொலைக்காட்சியை ஆசிரியருக்குப் பிரதியீடு கொள்ளச் செய்யும் தவறான நோக்கிலி ருந்து எழுகின்றது.

மாணவர்களிடத்து எழுகின்ற ஐயங்களை அறிந்து விளக்கங் கூறக்கூடிய திறன் தொலைக் காட்சிக்கு இல்லை யென்பது மட்டு மன்றி, திரிபுக்காட்சிகளும் தொலைக்காட்சியினால் உருவாக்கப் படுதல் கூடும்.

புத்தகங்களிலும், பாடத்திட்டங்களிலும் உள்ள பாடங்க ளைப் பிரதி செய்யும் பணியைத் தொலைக்காட்சி செய்ய முயலு தல் அதன் ஆளுமையைப் பூரணமாகப் பயன் படுத்தாத செயல் என்றே கொள்ளவேண்டும். பாட அனுபவங்களுடன் தொடர் புடைய படைப்பாற்றலை விசை கொள்ளச் செய்யுந்திறன் தொலைக்காட்சிக்கு உண்டு. பாட அனுபவங்களுடன் இணைந்த ஆக்கத்திறனை மாணவரிடத்துத் தூண்டிவிடக்கூடிய காட்சிப் புனைவுகளை வளமுடன் கையாளக்கூடிய ஏற்பாடுகளைத் தொலைக் காட்சியினால் இயற்ற முடியும்.

மாணவர் சுற்றுலாச் சென்று காணமுடியாத வெண்பனிக் கோபுரங்களையும், ஆழ்கடலையும், கனிப்பொருட் சுரங்கங்களை யும், பொறித்தொகுதிகளின் இயக்கங்களையும், பல்வேறு பண் பாட்டுப் பாரம்பரியங்களையும் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் திறன்மிக்க தொலைக்காட்சி, ஓர் அனைத்துலக மனிதனை உருவாக்கும் செயல் முறையிலும் வெற்றிகாண வேண்டியுள்ளது. வானொலி ஒரு தேசிய மனிதனை உருவாக்க, தொலைக்காட்சி ஒரு சர்வதேச மனிதனை உருவாக்க வேண்டியுள்ளது.



தொலைக்காட்சியின் பயன்பாடு ஆரம்பப்பாடசாலைக் கலைத் திட்டத்தை வளம்பெறச் செய்வதில் விசை கொள்ள முடியுமா யினும், இலங்கைத் தொலைக்காட்சியின் கல்வி நிகழ்ச்சிகள் இத் துறையில் ஆழ்ந்த பங்களிப்பை இன்னமும் செலுத்தவில்லை.

தொலைக்காட்சியைக் கல்விச் சேவைக்குப் பயன் படுத்துதல் தெளிவான திட்டமிடலின் கீழேகட்டியெழுப்பப்படல் வேண்டும். நமது நாட்டுப் பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கு ஏற்றவாறு சிறுவர் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிற் கவனஞ் செலுத்துதல் வேண்டும். மேலைத்தேயப் பண்பாட்டில் உருவாக்கப்பட்ட சிறு வர் தொலைக்காட்சிப் படங்களைத் தயாரிப்புப் பண்டங்களாகக் கருதி, எமது சிறார்களுக்கு வழங்குதலும் பொருத்தமற்றதாகி விடுகின்றது.

கலைத்திட்ட அனுபவங்களை முழுமைப் படுத்துவதற்கா கவே, தொலைக்காட்சி பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, தொலைக்காட்சிக்காகக் கலைத்திட்டம் என்ற எதிர் மறைவளர்ச்சி களுக்கும் இடமளிக்கப்படலாகாது.

முன்னிரவுக் காலத் தொலைக்காட்சிப்படங்கள், மாணவரது கற்றலைப் பாதிப்பதாக ஏலவேகண்டனங்கள் எழுப்பப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த திட்டமின்றி தொலைக்காட்சியை உபயோகிக்கும் பொழுது அவ்வாறான எதிர்மறைக் கண்டனங்கள் எழுதல் இயற் கையானதே.

# கலைத்திட்டமும் மொழியும்

மொழி, சிந்தனையுடனும், தொடர்பு கொள்ளும் நடத்தைகளுடனும் இணைந்தது. சொல்சாராத முறையிலும் சிந்தனை நிகழும். ஆனால் மொழியின்றிச் சிந்தனை மிகவும் கட்டுப்பட்டதாகவே அமையும். மொழியென்ற முழுமையான ஓர் ஒழுங்கமைப்பின் இணை உறுப்பாக விளங்கும் சொற்கள், சிந்தனையை இயங்கச் செய்யும் சுழல் அச்சாகவும் விளங்குகின்றன. சொற்களின்றி வேறு குறியீடுகள் வாயிலாகவும் சிந்தனையை இயக்க முடியுமாயினும், சொற்களின் பயன்பாடு மிகவும் விசாலித்து நிற்றலையும் நோக்க முடிகின்றது. சொற்கள், பொருள்களையும், அனுபவங்களையும் செயல்களையும் எண்ணக்கருக்களையும் மனச்சாட்சிகளையும் தேக்கிவைக்கின்றன.

சொற்கள் மனித இயக்கங்களுக்குரிய தூண்டிகளாகின்றன. மிருகங்களுக்கு விடுக்கப்படும் சொற்களுக்கும், மனிதருக்கு விடுக்கப்படும் சொற்களுக்குமிடையே தர அளவிலான வேறுபாடுகள் உள்ளன. அவ்வாறான வேறுபாடுகள் பேச்சு மொழிப் பண்பினால் எழுகின்றன. மிருகங்களுக்குச் சொல்லின் ஒலியே சமிக்ஞையாகின்றது. ஆனால் மனிதருக்கு சொல், பொருட் குறியாகவும், உணர்ச்சிக்குறியாகவும், புலன் காட்சிக் குறியாகவும்அமைகின்றது.

மனிதருக்குரிய முதற் சமிக்ஞையாகிய சொற்களுக்கும் இரண்டாம் சமிக்ஞையாகிய மொழிக்குமிடையே உள்ளார்ந்த இணைப்புப் பூரணத்துவம் உண்டு. மிருகங்களிலும் பார்க்க மனிதரிடத்துக் காணப்படும் அதியுயர்ந்த மூளை நரம்புச் செயற்பாடுகள் இந்தச் சந்தர்ப்பத்தில் இணைத்து நோக்குதற்குரியன.

மொழி எண்ணக்கருவாக்கத்தைத் தருகின்றது. சூழலின் சிக்கலான பண்புகளுக்கு அமைப்பாக்கம் தந்து சிந்தனையை இயக்கும் இலகுவாக்கம் எண்ணக்கருக்களினால் நிறைவேற்றப்படு



கின்றன. எண்ணக்கருவாக்கம் கற்றற் செயற்பாடுகளை நெகிழ்ச்சியுடைய தாக்குகின்றது.

சிந்தனை, பேச்சு ஆகியவற்றின் படிமலர்ச்சிகளை நோக்கும் பொழுது, குழந்தை நிலையிற் பேச்சும் சிந்தனையும் வேறுவேறாக அமையும் நிலைகளும் அவதானிக்கப் பெற்றுள்ளன. குழந்தை நிலையிலே ''தனக்காகப் பேசுதல்,'' ''பிறருக்காகப் பேசுகல்'' என்ற வேறுபாடுகளைக் குழந்தை அறியமாட்டாது. குழந்தை நிலையிலே சொல்சார்ந்த நிலைக்கு முற்பட்ட சிந்தனைகள் வளர்ச்சி பெறும். சிந்தனையும் பேச்சும் தனித்தனி செயற்பாடுகள் எனக் கொள்ளும் பொழுது, பேச்சும் சிந்தனையும் ஒன்றை யொன்று தழுவிக் கொள்ளும் சொல்சார்ந்த சிந்தனைகள் செயற்படுதலையும் நோக்க வேண்டும். அதாவது சொல்சார்ந்த சிந்தனை எல்லா விதமான பேச்சையும் உள்ளடக்காது — எல்லா விதமான சிந்தனைகளையும் உள்ளடக்காது.

இவற்றோடு தொடர்புடைய வேறொரு செயற்பாட்டையும் அவதானிக்கலாம். உள்ளத்திலே நிகழும் சிந்தனைக்கும் வாய்மூல வெளிப்பாடுகளுக்குமிடையே நேர்த் தொடர்புகள் அற்ற நிலைகளும் காணப்படும்.

குழந்தை வளரும் நிலைகளின் சமூகத்தொடர்புகளே சரியான இலக்கண அமைப்புத்தழுவிய பேச்சுத்திறனை வளர்க்கின்றன. இலக்கண அமைப்புத்தழுவிய பேச்சு வளர்ந்தாலும், அவற்றின் தருக்க முறையிலான தொடர்புகளைப் பிள்ளைகள் ஆரம்பத்தில் அறிந்து கொள்வதில்லை. கைகளால் எண்ணித் தொடர்புகளைக் காணும்திறன் அரும்புதல் தருக்க முறையிலான சிந்தனை வளரும் நிலையினைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

மொழி, சமூக வளர்ச்சியுடன் முழுமைகொண்ட வடிவம் நுண்மதி, கவனம், ஞாபகம், கற்பனை, சிந்தனை, ஆக்கத்திறன் அனைத்தும் மொழியுடன் தொடர்பு கொண்டவை. குழந்தையின் வளர்ச்சி நிலைகள் மேலோங்கிச் செல்ல, கருத்தியற் சிந்தனைகள் ஆழ்ந்து விரிந்து வியாபித்துச் செல்லும்.

மேற்கூறின செயற்பாடுகள் வேகமும் முழுமையும் பெறத் தாய் மொழிமூலமாகிய கல்வி இன்றியமையாதது. ஒருவரின் பூரண ஆளுமைத் துலக்கம், தாய் மொழிக்கல்வியினால் இலகுவாகவும் இனிதாகவும் நிறைவேற்றி வைக்கப்படுகின்றது.

சிந்தனை, சமூக நடைமுறையுடன் இணைந்தது. பல்வேறு இணைப்புக்களையும் உள்ளடக்கிய கலவை முறையில் அமைந்துள்

ளது. சமூக நடைமுறைகளிலிருந்து கிடைக்கப் பெறும் அனுப வங்கள், குறித்த சந்தர்ப்பத்தில் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஓர் அனுபவத்திரள் அமைப்பைக் கொடுக்கின்றது.

அனுபவங்களின் கூட்டமான தன்மையே சிந்தனைத்திர ளமைப்பு என்று கூறும் பொழுது, சூழல் மாற்றமடைய, நடை முறைகள் மாற்றமடைய, ஒருவனுடைய அனுபவத்திரளமைப் பின் சமநிலை மாற்றமடைந்த வண்ணமேயிருக்கும். எண்ணக் கருக்களின் தொகுதியாக அமையும் சிந்தனைத்திரளமைப்பு, புதிய வற்றைக் கற்பதற்கு வாய்ப்பாகவும், வளமாகவும் அமைகின் றது. இச்சந்தர்ப்பத்தில் அனுபவத்திரளமைப்பின் இணக்கப் படுத்தும் பண்பு, அல்லது சந்து செய்யும் செயற்பாடு கருத் திலே கொள்ளத்தக்கது. ஓர் உதாரணத்தினுல் இதனை விளக்க லாம். ஒருவர் ஒருபொருளைக் காட்சிவடிவிலே காணலாம்; அல் லது படமாக்கிய வடிவிலே காணலாம்; அல்லது ஒலிவடிவிலே அப்பொருளை உணரலாம்; அல்லது வரிவடிவிலே அதனை அறிய லாம். அவற்றில் எந்த ஒரு ஒரு வடிவமும் சிந்தனையிலே மிக நெகிழ்ச்சி ததும்ப இணக்கப்பாடுகளை ஏற்படுத்திவிடுகின்றது. இந்த இணக்கப்பாடு இல்லாவிடில், சிந்தனையும், தொடர்பு கொள்ளலும் இடர்களுக்கு உள்ளாகிவிடும்.

நிபந்தனைகளும் அவற்றின் மீளவலியுறுத்தல்களும், சிந்தனை யாக்கங்களை மேலும் மேலும் செழுமைப்படுத்துகின்றன.

சிந்தனையும், மொழியும் மனித உழைப்புடனும், உழைப்புத் திரட்சியுடனும் இணைந்தவை. உழைப்புடன் இணைந்த புறவய மான அறிதல் தருக்க முறையிலான சிந்தனையை வளர்க்கும். உழைப்பின் போக்கில் இணைந்த உணர்ச்சிக் கோலங்கள் கலை யாக்கச் சிந்தனைகளாக வெளிப்படுகின்றன.

மொழியின் செயற்றிறன்களைக் கட்டியெழுப்பும் இயக்கப் பாடுகளைக் கலைத்திட்டம் தனக்குரிய தலையாய பணியாக ஏற்க வேண்டியுள்ளது.

♥



# தொடர்புக் கோலங்கள்

**உயிர்க்கோளம்** தொடர்புகளை வேண்டி நிற்கின்றது. மனி தரிடையே நிகழும் தொடர்புகள் கல்வியால் வளர்த்தெடுக்கப் படுகின்றன. கலைத்திட்டத்தின் பணி தொடர்புகளை ஒழுங்கமைத் தல் என்று கூறமுடியும்.

மொழியால், அசைவுகளால், முத்திரைகளால், தொடர்பு கள் இயக்கப்படுகின்றன. தொடர்புகளின் வலிமைமிக்க இயங்கு தளம் மொழி. தொடர்புகள் உடலையும், உள்ளத்தையும் இயங்க வைக்கும் பொழுது கற்றல் நிகழ்கின்றது. பின்பற்றுதல், பிர யோகித்தல் என்பவை தொடர்புகளால் ஊட்டப்படுகின்றன.

தொடர்பு மூன்று பரிமாணங்களைக்கொண்டது. அவை, தகவல், உளக்கோலம், செயற்பாங்கு என்பனவாகும். தகவல் உள்ளத்தின் களஞ்சியமாகத் தேக்கிவைக்கப்படுகின்றது. தூண்டி களுக்குரிய செயற்படுதிறன்களைத் தகவல் வழங்குகின்றது. உளக்கோலம் அனுபவங்களின் ஒன்றிணைப்பாக வாழ்நிலை அனுப வங்களாக விளங்குகின்றது. தகவல், **உளக்கோலம்** என்பவற் றுடன் இணைந்ததாகச் செயற்பாங்குகள் விளங்குகின்றன. தொடர்புப்பாங்குகளுடன் இணைந்ததே கலைத்திட்ட ஒழுங் கமைப்பு. அறிவை ஒழுங்குபடுத்துதல், அனுபவங்களை உருவாக் குதல், செயற்பாங்குகளை வழிப்படுத்துதல் என்பவை கலைத்திட் டத்துக்குரிய பணிகள். இந்தப் பணிகளை இயக்குகையிற் கலைத் திட்டம் மாணவர்க்கிடையேயும், குழுக்களுக்கிடையேயும் தொடர் புத் தொகுதிகளை உருவாக்குகின்றது.

இவ்வாறான தொடர்புத் தொகுதி உடல் சார்ந்த, உள்ளம் சார்ந்த, இயக்கங்களைத் திறன்மிக்குடைய தாக்குகின்றது. இந்த

ஒழுங்கமைப்பு முழுமையிலே மாணவர் பங்கு கொள்ளுகின் றார்கள்.

கருத்து வடிவான சிந்தனைகளின் வளர்ச்சி, தொடர்பு நிலைகளிலே நுண்ணறிவு, ஆக்கத்திறன், ஆகியவற்றின் ஒன்றிணைப்பை வலிமையுடையதாக்கியது. தொடர்பு உள்ளடக்கத்தை அடிப் படையாகக் கொண்டது. கலைத்திட்டத்தின் உள்ளடக்கத்துக்கு ஏற்றவகையிலே தொடர்பு முறைகள் உருவாக்கப்படுகின்றன.

கலைத்திட்டத் தொடர்பின் ஒருபுறம் ஆசிரியர் இயக்கமும் மறுபுறம் மாணவர் செயற்பாடுகளும் இருவழித் தொடர்பு கொண்டவையாய் விளங்குகின்றன. கலைத்திட்டத்தில் ஒருவழித் தொடர்புக்கு இடமில்லை. சித்திரப் பதுமை போல் மாணவர் இருக்க வேண்டுமென்பது காலங்கடந்த ஒருவழிப்பாதை. தொடர்பில் எதைத் தொடர்புபடுத்தல் வேண்டும், யாருக்குத் தொடர்பு படுத்தல் வேண்டும், எவ்வாறு தொடர்பு படுத்தல் வேண்டும், என்ற மூன்று தளங்கள் உள்ளன. எதனை என்பதற்குக் கலைத் திட்டத்தின் உள்ளடக்கமே விடையாகின்றது. யாருக்கு என்பதில் மாணவரின் உளவியற் கோலங்களுக்குரிய அழுத்தங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. எவ்வாறு என்பது கற்பித்தல் முறையியல் நுட்பங்களை அவாவி நிற்கின்றது.

மேற்கூறிய மூன்று நிகழ்ச்சிகளும் வாழ்நிலையுடன் இணைந்தவை. அறிவு நிதியத்தின் இருப்பு, தொழில் முறைகள், உற்பத்தி உறவுகள் என்பவற்றுடன் இணைந்த மாற்றங்களை வேண்டி நிற்கும். அந்நிலைகளிலே தொடர்பு வழி மாற்றங்களும் பிரதிபலிக்கப்படும்.

ஏற்கனவே நிலை பெற்றுள்ள சமூக அமைப்பைச் சீர்திருத்துதல், திருத்தங்களை உட்புகுத்துதல், நயத்தல், விமர்சித்தல் என்பவற்றுடன் கலைத்திட்டத் தொடர்புகளைக் கட்டுப்படுத்துதல் காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளாக ஒரு புறம் விளங்குகின்றன.

மறுபுறம் அடிப்படையான சமூக மாறுதல்களையும், அவற்றின் விளைவாகப் புதிய தரிசனங்களையும் கட்டியெழுப்ப வேண்டும்] என்றபாங்கிலே கலைத்திட்டத் தொடர்புகளை நயம்படுத்தும் நடவடிக்கைகளும் இயக்கமுறுகின்றன.



மேற்கூறிய இருவகையான அணுகுமுறைகளும் வாழ்நிலை வழங்கிய அனுபவங்களின் வழியாக வேர் பரப்புகின்றன. செல்வப்பங்கீடு, குடிப்பெருக்கம், தொழில் நுட்பவியல் வளர்ச்சி, தொழிற்பிரிவு, அந்நியமாதல், நகரமயமாக்கல், போன்ற சமூகக் கோலங்களிடையே கலைத்திட்டத்தைக் கட்டியெழுப்ப முயலும் போது சீர்திருத்தமா, அடிப்படை மாற்றமா என்ற கேள்விகள் பரவலாக எழுப்பப்படுதல் உண்டு.

கல்வி என்பது அனைத்துத்துறைகளையும் தழுவிய ஒன்றிணைந்த முழுமை என்பதனல், கலைத்திட்டத்துறையில் நிகழ்த்தப் பெறும் தொடர்புப் பின்னல்களும் பூரணத்துவம் வாய்ந்ததாகா தென்பதை நினைவிலே கொள்ள வேண்டியுள்ளது. சமூகத்தின் அனைத்துத்துறைகளையும் வலிமையாகவும், முழுமையாகவும் கல்விதழுவியுள்ளமை, ஒன்றிணைந்த தொடர்புகளையும், அடிப்படை உண்மைகளையும், வலியுறுத்தி வருகின்றவேளை, நியதிகளை விளக்குதலோடு மட்டுமன்றி, நியதிகளை மாற்றியமைத்தல் மீதும் ஒளிக்கீறுகள் குவிக்கப்படுகிறன.

122973

122973